Regd. No. 2975 ஸ்ரீ:

# SRI RAMANUJAN

Editor :—P. B. ANNANGARACHARYA, KANCHEEPURAM–3.

# ஸ்ரீ ராமாநுஜன் -286.

ஆசிரியர்: P. B. அண்ணங்கராசாரியர்

பகுதிச் சந்தா ரூ. 10. ஜீவியச் சந்தா ரூ. 58.

பேரருளாளன் பெருந்தேவித்தாயார் திருவடிகளே சரணம்.



ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

ஆழ்வார்கள் வாழி அருளிச்செயல் வாழி*
தாழ்வாது மில்குரவர் தாம்வாழி—ஏழ்பாரு
முய்ய வவர்க ளுரைத்தவைகள் தாம்வாழி*
செய்யமறை தன்னுடனே சேர்ந்து.

15—8—1972ல் வெளியிடப்பட்டது.


# பத்ரிகையைப் பிரிக்ும்போதே பார்க்கவேண்டியநிது.

யார் எதை யெழுதினலும் எழுதுகோல் நானெழுதமாட்டே னென்னுது. காகிதம் நான் தாங்கமாட்டேனென்னுது. அச்சு நான் படியமாட்டேனென்னுது. அஸம்பத்த ப்ரலாப புஞ்ஜமயமான ஸ்ரீ வைஷ்ணவ ஸமாராதன மென்கிற வொரு சுவடி தான் பிறந்து சிலமாதங்களாய்விட்டதாகக் காட்டிக்கொண்டு இன்றே வெளி வந்து இன்றே மாள்கின்றது. எதிரே விளங்கும் ரத்ன கிரீடத்தை ஆர அமர அநுபவித்துவிட்டு அதன்பிறகே மேல் விஷயங்களை யநுபவிக்கக்கடவீர்கள்.

---

கீர்த்திமூர்த்தியான ஸ்ரீமதுபயவே. கோமடம் சடகோபாசார்ய ஸ்வாமியின் திருக்குமாரரான (மதுரை) ஸ்ரீ. உ. வே. ராமாநுஜாச்சார்யருடைய திருத்தாயாரின்

## திருவத்யயன இயல்கோஷ்டி (பரீதாவிஞு ஆடிமீ")



ஸ்ரீ:

ஸ்ரீயதே ராமாநுஜாய நம: ஸ்ரீமத் வரவரமுநயே நம:

ஸ்ரீகாஞ்சி. பிரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசாரியர் எழுதிய

# தேசிகபக்த ரத்னகிரீடம்

(சுலோ.) 1. தேசிகபக்தா வயமிதி வததாம் சிரஸோ விபூஷணார்த்தமிதம்
அவதரதி தே மஹாந்தோ மண்டிதநிஜமஸ்தகா மஹியந்தாம்.

2. நவரத்நகசிதமேதத் ரத்நகிரீடம் ஸதா முதா சிரஸி,
பிப்ரதி வித்வத்ப்ருந்தே நித்யஸ்ரீர் நித்யமங்களம் பூயாத்.

3. லாபஸ் தேஷாம் ஜயஸ் தேஷாம் குதஸ் தேஷாம் பராபவ:,
யேஷாம் சிரஸி பூஷைஷா விராஜேத விசேஷத:

4. ஸ்ரீவைஷ்ணவ ஸமாராதநாபிதா நாம் லகீயஸீம்,
க்ருதிமுத்திச்ய கதிசித் வசாம்ஸி விநிவேதயே.

பேய்க்குப்பேய் பேசினபோல் பேராமல் சொன்னதல்ல
வாய்க்கும் வாய்ப்பொருளின்ப மாங்காங்களித்திடுவேன்
தாய்க்குந்தாய் மந்திரத்தின் சாரமென நுன்குணர்ந்து
நோக்கும் நோக்குடையார்கள் நுட்பமதாந் தெளிகுவரே.



இதை யாவரும் குறிக்கொள்ள வேணு மென்று நான் பிரார்த்திக்க வேண்டிய தில்லை. எனது நான்கு பாஷைப் பத்திரிகை களையும் பெறுமவர்கள் ஒருவர் தப்பாமல் கண்டபாடம் செய்திருக்கிறார்களென் பதைத் திருமலை வேள்வியில் சந்தித்த நாற் றிசை நண்பர்களிடத்தும் கண்டறிந் தேனாதலால்.

ஸ்ரீ வைஷ்ணவ ஸமாராதனமென்கிற சுவடி யொன்றை இன்று (14—8—72) மதுரையிலிருந்து ஒரு நண்பர் அனுப்பியத னால் கிடைக்கப்பெற்றேன். ஸ்ரீமான் மதுரை மாடபூசி நரசிம்மாசாரியரென்ப வர் இச் சுவடியை யெழுதியவர். முன்னம் சுருக்கமாக இவருடைய அபிப்ராயங்களைத் தெரிவிக்கிறேன். ஸ்ரீமதுபயவே. வித்வான். திருமங்கலம் ஸ்வாமி யென்கிற வொரு மஹான் சென்ற 1971ஜு ஜூலை மாதத்தில் "ஆண்டவன் ஸன்னிதியில் அந்தரங்க விஜ்ஞாபனம்" என்றொரு நூல் வெளியிட்டிருந்தார். அதில் பெரும்பாலும் என்னு

டைய நூல்களிலுள்ள விஷயங்களையே அநுவதித்து "பாபிகள் இப்படியிப்படி எழுதியிருக்கிறார்களே, இவர்களைக் கண்டிப்பாரில்லையா?" என்று பரிதாபப்பட்டு எழுதப்பட்டிருக்கிறது. அந்த நூலும் அதுபோன்ற மற்றுஞ் சில நூல்களும் நானே யெழுதி வெளியிட்டவை—என்பது இவருடைய கொள்கை. இதை ஸ்பஷ்டமாகவே இவர் தம்து சுவடியில் பொறித்துள்ளார். இதற்குச் சொல்லுகிறோம். நம்முடைய நூல்கள் 15 துறைகளில் அமைந்துள்ளனவென்பதை உலகமறியும். ஸ்ரீராமாநுஜன் இதழ்தோறும் அட்டையின் நான்காவது பக்கத்தில் அத்துறைகள் இன்னின்னவை யென்று விளக்கப்பட்டே வருகிறது. இவ்விதழிலும் காணலாம். அத் துறைகளில் பரபக்ஷப்ரதிக்ஷேபத்துறை யென்பது மொன்று. (அதாவது) கண்டிக்கவேண்டிய பரமதச் சுவடிகளைக் கண்டிப்பதும் ஒரு துறை யென்க. இன்றுவரை நாம் நான்கு பாஷைகளிலும் இயற்றி வெளியிட்டுள்ள தொள்ளாயிரத்து முப்பத்தேழு நூல்களுள் பரமத கண்டன நூல்கள் நூற்றுறு என்பதை உலகமறியும். ஸ்பஷ்டமாக—ஸுஸ்பஷ்டமாக நம்முடைய பெயரையிட்டே மறுப்பு நூல்களை நாம் நிஸ்ஸங்கோசமாக—தாராளமாக—நிரர்க்களமாக—நிர்தாக்ஷிண்யமாக வெளியிட்டுக்கொண்டிருக்க, மறுபெயரையிட்டோ மாறுபெயரையிட்டோ வெளியிடவேண்டிய அவசியம் யாது கொல்?

யாதவாப்யுதயத்தில் தேசிகன் "முஹு: ப்ரவ்ருத்தம் நவநீதசௌர்யே வத்ஸாந் விமுஞ்சந்தம் அதோஹகாலே" என்று க்ருஷ்ணசேஷ்டித மிரண்டு ஸாதிக்கிறார். அதோஹகாலே வத்ஸவிமோசன மென்கிற காரியம் சிறுச்சேவகங்களிலொன்றாக இருக்கட்டும். நவநீதசௌர்யே முஹு:ப்ரவ்ருத்தி யென்பது எதற்காக? சிறிது வெண்ணெய் தருகவென்று வாய்திறந்து கேட்டால் திருவாய்ப்பாடியடங்கலும்—பஞ்சலக்ஷங் குடிற்பெண்களும் அள்ளியள்ளிக் கொடுக்க காத்திருக்கிறார்களென்பதில் ஐயமுண்டோ? அப்படியிருக்க எதற்காகக் களவு செய்யவேண்டுமென்றுகேட்டால் மருமமறிந்து கூறுவாருளர். "விடை கூறுங்கள், கூறி என்னை அடிமைகொள்ளுங்கள்" என்று நூல்தோறுமெழுதி கர்ஜிக்கும் ப்ரதிவாதி பயங்கர ஸிம்ஹம் மறைந்திருந்து செய்யவேண்டிய அவசியம் லவலேசமுமில்லை.

வெளிவந்துள்ள—வெளிவந்துகொண்டிருக்கிற—வெளிவரப்போகிற விஷயங்களில் ஒன்றுக்கும் வாய் திறக்கவும் கை பெயர்க்கவும் சக்தியற்ற விவர்கள் தாங்களும் ஏதோ புத்தகம் அச்சிட்டுவிட்டதாகக் காட்டித் தேறுதல் பெறுதற்குச் செய்து வருகிற சூதுகளிவை யென்பதை உலகமறியாதா?

நாம் இளமை தொடங்கியே கண்டனமெழுதிவருகிறோமென்பதை இவர்கள் கண்டறிந்து தெரிவிப்பது ஸத்யம் ஸத்யம் புநஸ் ஸத்யம். இராமபிரானுக்கும் கண்ணபிரானுக்கும் வாசிகூறுகின்ற ஆசாரியர்கள் "சக்ரவர்த்தி திருமகன் பக்வனனபின்பு விரோதி நிரஸனம் செய்தான்; கண்ணபிரான் தொட்டிற் பருவமே பிடித்து அது செய்யாநின்றான்" னென்றார்கள். அதேபோல் நாம் செய்து வருவதை நன்கு இசையத்தட்டில்லை.

ஸ்ரீ ராமாயணம் நடையாடாதவிடத்தில் சில பேச்சுக்கள் நிகழ்வதுண்டு—ராவணன் எப்படிப்பட்ட வீரன்! கும்பகர்ணன் எப்படிப்பட்ட சூரன்! கரதூஷண

மாரீசாதிகள் எப்படிப்பட்ட பராக்ரமிகள்'' இத்யாதி. அதுபோல இவரும் சில சுவடிகள் தம்மினத்தவரால் வெளியிடப்பட்டிருப்பதாக நாணமின்றிப் பெயர் குறிக்கிறார். கருவிலே மாண்டவை எத்தனை! வெளிவந்த மறுநாளிலும் மூன்றாம் நாளிலும் மாண்டவை எத்தனை! என்று வினவினால் தயாராதே விடை யளிக்கவல்லவர் ஒருவரே: அவர் தாம் சென்னையில் வாழும் ஸ்ரீமதுபயவே. ராவ்ஸாஹிப் S. ராகவையங்கார் ஸ்வாமி. 'யதார்த்த ராமாநுஜன்' தோன்றி யிருப்பதாக அந்தோ! கைகூசாமல் எழுதுகிறாரே! அது சிலகாலம் மறைந்தேயிருந்து வாழ்ந்த நூண்டு: அப்படியே கிடந்து சிரஞ்சீவி பட்டம் பெற்றிருக்கலாம். அதற்கு விதி மாண்டுவிட்டதே!

இருவர் புறப்பட்டு மருகாந்தாரத்தில் சென்றார்கள்; சூறாவளிக் காற்றுவந்து ஒருவனைத் தூக்கிக்கொண்டுபோய்ப் பாழுங்கிணற்றில் தள்ளிவிட்டது. மற்றொருவன் கிணற்றருகே ஓடிச்சென்று 'அப்பா! விழுந்துவிட்டாயா?' என்கிறான்; அதற்கு அவன் விழுந்துகொண்டே யிருக்கிறே னென்கிறான். அதுபோல யதார்த்த ராமாநுஜன் 'மாண்டுகொண்டே யிருக்கிறேன்' என்கிறது. ஸம்ப்ரதாய ஸுதா என்ற ஒரு சுவடியைக் குறிப்பிடுகிறார் பாவம்! அது இயற்றியவர் ஸ்ரீமதுபயவே. மதுராந்தகம் வித்வான் வீரராகவாசாரியர் ஸ்வாமி. உண்மையில் இவர் ப்ராமாணிகர், விவேகி. உலகின் பாக்கியத்தினால் வாழ்ந்திருப்பவர். 'ஸ்வாமிந்! தேவரீருடைய ஸுதா என்ன நிலையிலுள்ளது?' என்று கேட்டால் "தொழுமத்திசை யுற்று நோக்கியே" என்கிற திருவாய்மொழிப் பாசுரக்கணக்கிலே நானிருக்கிறே னென்று உள்ளபடி யுரைத்திடுவர்.

வையத்து வாழ்வீர்காள்! கேண்மின்; இவர்களது வகுப்பில் தலை சிறந்த—தலைநரைத்த பண்டிதர்கள் இல்லாமற் போகவில்லை; எழுதாமலுமில்லை. யாதவாப்யுதயத்தில் சில சுலோகங்கள் ஆச்சரியமானவை கேளீர்:

"மநீஷிதம் கைதவமாநுஷஸ்ய ச்ருத்வா பயக்ரோதபரிப்லுதாத்மா
கம்ஸச் சிரம் ப்ராக்பவகாலநேமிச் சிந்தார்ணவே மக்ந இவாவதஸ்தே."

அதற்குமேல் என்னாயிற்று?

"ஸ துர்தமாந் ஆஸுரஸத்வபேதாந் நேதா ஸமாஹூய ந்ருசம்ஸசேதா:,
ப்ரஸ்தாபயாமாஸ பரைரத்ருஷ்யம் நந்தாஸ்பதம் நாதவிஹாரகுப்தம்.';

இந்த சுலோகத்தில் கம்ஸன் புறப்படவிட்ட அசுரப் பூண்டுகட்கு துர்தமாந் என்று ஒரு விசேஷணமிட்டார் ஸ்வாமி; போகவிட்டவிடமான நந்தாஸ்பதத்திற்கு "பரை: அத்ருஷ்யம்" என்றும், "நாதவிஹாரகுப்தம்" என்றும் இரண்டு விசேஷணமிட்டார். ரஸமறியும் ரஸிகர்களில்லையே. தர்ம்புரி ஜில்லா காட்டம்பட்டியில்வாழும் ஸ்ரீ உ. வே. வித்வான். புராணம். ஸ்ரீநிவாஸ ராகவாசாரியர் ஸ்வாமி—ஸஹ்ருதய ஸுஹ்ருந்மணி—ரஸிக சக்ரவர்த்தி—அவர் அறிவர்.

"ப்ரஸ்தாபயாமாஸ" என்றதற்குப் பிறகு என்னாயிற்று? என்னாகும்? ஆயிரமாயிரமாயிற்று; அவற்றில் ஒன்று கேளீர்! ஒன்றே கேளீர்!

"ஸபக்ஷகைலாஸநிபஸ்ய கோபா: பகஸ்ய பக்ஷாந்அபிதோ பபந்து:,
வநே ததந்யாநபி கோரவ்ருத்தீந் க்ஷேப்தும் ப்ரவ்ருத்தா இவ கேதுமாலா:"

புள்ளின்வாய் கீண்ட கதையைச் சொல்லும் சுலோகமிது. (பகாஸுரன் பட்டொழிந்த கதை.) மாயப்புள்ளாகையாலே உருக்காண வொண்ணுதபடி நீறு நீருகிப் பாறுபாறுகி யொழிந்ததென்று நினைத்திருப்பார்கள். அப்படி யில்லை. மாயமானைக் கொன்றபோது "மாரீசமாயாம்ருகசர்ம பரிகர்மித நிர்ப்பரதர்ப்பாஸ் தரண" என்று க்ருஷ்ணஜினமாகக் கொண்டு ஆஸனம் அமைத்ததாக அருளிச்செய் தார். ஸபக்ஷகைலாஸ ஸந்நிபமான புள்ளைக்கொன்று அதன் பக்ஷங்களை வனமெங் கும் தொங்கவிட்டனரும் இடையர்கள். அது எதற்காகவென்னில்; [ததந்யாநபி கோரவ்ருத்தீந் க்ஷேப்தும் ப்ரவ்ருத்தா இவ கேதுமாலா:] கவிதார்க்கிக கேஸரியின் திருநாவீறு கண்டீர்களா? அந்த கேதுமாலைகளுக்கும் மேலாகவன்றே நம்முடைய க்ரந்தமாலைகள் திசைதொறும் வில்வீசுவன. அந்த நமது க்ரந்தமாலைகளில் பல வற்றில் "இதை நீங்கள் நிரூபித்துவிட்டால் உங்களிடம் வந்து பலரெதிரில் என் நூல்களையெல்லாம் கிழித்தெறிந்துவிட்டு உங்கட்கே தொண்டனுயிருந்து காலங் கழிக்கக்கடவேன்" என்று கொட்டையெழுத்தில் வெளியிட்டிருப்பதை உலகம் காணுமலில்லை. அதெல்லாம் பொருளற்ற பேச்சுக்களென்று நினைவா? ஆறு வடகலை வித்வான்களை மத்யஸ்தர்களாக்கி [அவர்களது திருநாமங்களைக் குறிப் பிட்டு] இருப்பது எத்தனை தடவை? என்று எண்ணிப்பார்க்கலாமே.

இந்த நவீனர்களின் போக்கைச் சிறிது விவரிக்கிறேன். கேளீர். சிலவாண்டு கட்குமுன்பு ஆசார்யகம் செய்து கழிந்தவரான திருவயிந்திரபுரம் சேட்லூர் நரஸிம்ஹாசாரியரென்பவர் தேசிகனுடைய சரணுகதிகத்ய பாஷ்யத்தைத் தாம் தமிழாக்கஞ்செய்து வெளியிடுகையில் ஏற்கனவே ச்ருதப்ரகாசிகாசாரியர் இதற்கு பாஷ்யம் செய்திருந்தாலும் அதில் வாத்ஸல்யம் நாம-தோஷேபி குணத்வபுத்தி:" என்று அஸம்ப்ரதாயமான அர்த்தத்தை எழுதியிருக்கையாலே அதைக் கண்டிக்கவே ஸ்வாமி தேசிகன் தாம் வியாக்கியானம் செய்தருளினுர்—என்றெழுதியுள்ளார். அவர் மண்ணுலகை நீத்துவிட்டாலும் அவருடைய இந்தப் புத்தகம் திருவல்லிக் கேணியில் விற்கப்பட்டு வருகிறது. எளிதாக வாங்கிப்பார்க்கலாம். தார்க்கபாண் டித்யத்தாலே நினைத்ததெல்லாம் ஸாதிக்கவல்லவருடைய வாக்குத்தவிர ஆளவந்தா ரெம்பெருமானுர் ஆழ்வான் பட்டர் முதலான மற்றெல்லாருடைய திருவாக்குக் களும் அஸம்ப்ரதாய மென்னக்கற்ற விவர்களுடைய அத்யவஸாயம் மெச்சத் தக்கதே. ஆகவேதான் பகவத்ராமாநுஜ தர்சனமென்றதைவிட்டு தேசிக தர்சன மென்று கொண்டார்கள். இதை நாம் க்ஷேபிக்க நெஞ்சாலும் நினைக்கிலோம். தேசிக திவ்யஸூக்திகளையாவது இவர்கள் நன்கு கற்று நன்குணர்ந்து அவருடைய திருவுள்ளத்தை அணுமாத்திரமும் கடவாதே யிருந்தார்களாகில் 'இது வொருமதம்' என்று நாம் கொள்ளக் குறையில்லை. மோதிரத்தை முன்னே செய்வித்து விரலைச் சீவுவாரைப்போலே யென்று நாம் பலகால் எழுதியிருக்கிறோம். எந்தெந்த தேசிக திவ்யஸூக்திகளை இவர்களுக்குக் காலகூடமென்று நாம் ஐம்பது வருஷமாக நிரூபித்து வருகிறோமோ அவற்றில் ஒன்றையும் விடாமல் "இவை எமக்குக் காலகூட மல்ல, அம்ருத கலசமே" என்று ருஜுஸாரணியில் நிரூபித்தாகவேணும். நமது ப்ரச்னங்களெல்லாம் ஜிஜ்ஞாஸாப்ரச்னங்களேயொழிய ஜிகீஷாப்ரச்னமல்லவென்று தெளிந்து சிஷ்யர்களுக்குத் தெரிவிக்குமாபோலே தெரிவிக்கவேணும். ஜிகீஷா ப்ரச்நமா யிருந்தாலும் பொறுமையோடு விடையிறுத்தல் பாங்கு.

# இவரைப்பற்றி.

இப்போது ஸ்ரீ வைஷ்ணவ ஸமாராதனமென்கிற சுவடியின் வெளியீட்டுக்கு ஆளாக்கி நிறுத்தப்பட்டிருக்கின்ற மதுரை மாடபூசி ஐயங்காரைப்பற்றிச் சில தெரிவிக்க அவசியமாகிறது. இவர் தமது சுவடியின் முகப்பில் "நூலாசிரியரின் குறிப்பு" என மகுடமிட்டு ஒரு சிறு பக்கமும், "தாஸனின் விஜ்ஞாபனம்" என மகுடமிட்டு இரண்டு பக்கமும் எழுதியுள்ளார். ஸ்ரீமதாண்டவன் திருவடியான வித்வான் உபயவே. திருமங்கலம் ஸ்வாமியைப்பற்றி அநந்விதமாக ஏதோ எழுதியுள்ளார் முந்தின கட்டுரையில்; அடுத்த கட்டுரையில் நம்மை ப்ரஸ்தாவித்து, நமக்கு, நாம் குணைர்தாஸ்ய முபாகதரா யிருந்ததாக (அதாவது) சக்ரவர்த்தி திருமகன் பக்கலிலே இளையபெருமாள் குணங்களுக்குத் தோற்று அடிமைப்பட்டிருந்தாப் போலவும், நம்மாழ்வார் பக்கலிலே ஸ்ரீ மதுரகவிகள் "அபி ச குணவசாத் ததேக சேஷீ" என்னும்படி அடிமைப்பட்டிருந்தாப்போலவும் இவர் தாம் நம் குணங்களுக்குத் தோற்று நம்மிடத்திலே தாஸ்யம் பூண்டிருந்ததாக வெழுதி இப்போது அந்த தாஸ்யத்தில் நின்றும் விலகிக்கொள்ள நேர்ந்ததாகவும் எழுதுகிறார். மூக்கும் காதும் அறுப்புண்டு கதறி யழுது புலம்பாநின்ற சூர்ப்பணகை "தருணௌ ரூபஸம்பந்நௌ ஸுகுமாரௌ மஹாபலௌ, புண்டரீகவிசாலாக்ஷௌ சீரக்ருஷ்ணாஜிநாம்பரௌ; கந்தர்வராஜப்ரதிமௌ பார்த்திவவ்யஞ்ஜநாந்விதௌ......" இத்யாதிகளைப் பரவசையாய்ப் பேசினதுபோல இவரும் "சித்ரபுங்கப்ரகாசாநாம் வித்யுத்ஸத்ருசவர்ச்சஸாம், ஸ்மரந் ராகவபாணாநாம் விவ்யதே ராக்ஷஸேச்வர:" என்றதற்கும் மேலான நிலையில் நிற்கச்செய்தேயும் குணைர்தாஸ்யமுபாகதராயிருந்த நிலைமையை மறைக்கமாட்டாமல் எழுதுகிற ப்ராமாணிகத்வம் போற்றத்தக்கதே.

இவர் தாஸ்யமுபாகதரான விதத்தை உலகமறியவேண்டாமா? அறிவிக்கிறோம். ஸாதாரணவாண்டில் நமக்கு சதாபிஷேகம் நடைபெற்ற ஸமயத்தில் சில நாட்கள் காஞ்சியில் வந்திருந்தார். இவருடைய மாமனாரும், நமக்கு இளமை தொடங்கி பஹிச்சர ப்ராணபூதருமான ஸ்ரீ உ.வே. வித்வான் (நாச்சியார்கோவில்) நடாதூர் ராகவாசாரியருடைய சிபார்சு கடிதம் பெற்றுவந்தார். அப்போது நடந்த வித்வத்ஸதஸ்ஸில் இவர் தாமும் பேசவெழுந்து நீண்ட பத்ரிகை யொன்றெழுதிக் கையில் வைத்துக்கொண்டு கத்யபத்யங்களை வாசிக்கத் தொடங்கி

"பரவாதிபயங்கரஸூரிமணே: பதபங்கஜரேணு பராக்ரமவித்
மதுராநகரீநரஸிம்ஹ இஹ ப்ரதிபாதயதே குருராட்விபவம்"

என்ற முகபத்யத்துடன் வாசிக்கத் தொடங்கினர். அப்போது நாம் "இந்த வீண் ப்ரசம்ஸையினால் வ்ருதா காலயாபனம் பண்ணவேண்டாம்; உபஸ்திதர்களான வித்வான்கள் உகக்கும்படி, நீர் கற்றுணர்ந்த விஷயங்களில் ஏதேனும் பேசும்" என்று வற்புறுத்திச் சொல்லியும் "குணைர்தாஸனென நான் இங்கு ஸன்மானம்பெற விடை கொள்ளவில்லை; ஸ்வரூபாநுரூபமான வாக்வ்ருத்தியாலே ஸத்தை பெறுவதற்காகவே விடைகொண்டேன் என்று அதையே உபந்யாஸமாகச் சொல்லி முடித்தார். இவருடைய தாஸ்யவ்ருத்தியும் ஹாஸ்ய வ்ருத்தியுமெல்லாம் லாஸ்ய வ்ருத்தியே யாகும்.

இவர் நம்மை பீஷ்மபிதாமஹராக எழுதியுள்ளார். அதிலிருந்து பீஷ்மாசார்ய விஷயமான ச்லோகமொன்றை ஸ்மரித்து அதன் விசேஷார்த்தத்தை உலகுக்கு ஊட்டுகிறேன். "சரதல்பகதோ பீஷ்மச் சாம்யந்நிவ ஹுதாசந:......" இத்யாதி செவிப்பட்டவாறே கண்ணபிரான் "தஸ்மிந் அஸ்தமிதே பீஷ்மே கௌரவாணாம் துரந்தரே, ஜ்ஞாநாநிஅல்பீபவிஷ்யந்தி தஸ்மாத் த்வாம் சோதயாம்யஹம்" என்று யுதிஷ்டிரரை நோக்கிப் பணித்தான். இங்கு [ஜ்ஞாநாநிஅல்பீபவிஷ்யந்தி] என்றதற்கு என்ன அர்த்தம் தெரியுமோ? ஜ்ஞாநாநி என்றது ஜ்ஞாதவ்ய விஷயங்கள் என்றபடி. அவை அல்பமாகையாவது—குறிக்கொண்டிது கேண்மின். திருமங்கையாழ்வார் வெறுத்துக் காறியுமிழும் விஷயங்களைப் பேசும்போதும் *வாணிலா முறுவற்சிறுநுதல் பெருந்தோள் மாதரார்வன முலைப்பயனே பேணினேன்* என்றும் *சாந்தேந்து மென்முலையார் தடந்தோள் புணரின்ப வெள்ளம்* என்றும் பேசுகிறார்; வீதராகர்க்கும் ஸ்ப்ருஹை பிறக்கும்படி இங்ஙனே பேசுவதென்? என்று ஒருவாசார்யரைக் கேட்க அவர் ஸாதித்தபடி. திருநாவீறுடையார் திருவாக்கு அஸாரத்தைப் பேசினாலும் அது கனம்பெற்றதாய்விடும்; பாமரன் பரமோத்க்ருஷ்ட விஷயத்தைப் பேசப்புக்காலும் அவனது நாவின் புன்மை அவன்கொண்ட விஷயத்தையும் புல்லியதாக்கிவிடுங்காணும் என்று. இதை நெஞ்சிலே கொண்டு "ஜ்ஞாநாந்யல்பீபவிஷ்யந்தி" என்றதற்கு அர்த்தங் காணவேணும். பீஷ்மராகிற பாஸ்கரன் அஸ்தமித்தபிறகு அவரைப்போன்ற வக்தா இல்லாமையாலே அநதிகாரிகள் பேசப்புக, கனத்த விஷயங்களும் சிறுத்துப்போகுமென்கை.

இதை நாம் இங்கு எடுத்துக் காட்டுவது எதற்குத் தெரியுமோ? (தஸ்மிந்நஸ்தமிதே பீஷ்மே") என்பது இங்கு விஷயமன்று; "ஜ்ஞாநாந்யல்பீபவிஷ்யந்தி" என்னுமதுவே விஷயம். சிறந்த வித்வந்மணியான திருமங்கலம் ஸ்வாமி தமக்கு தேசிக திவ்யஸூக்திகளில் சங்கைகள் தீரப்பெறாத வருத்தத்தை உள்ளபடி வெளியிட்டிருக்கிறார். அந்த சங்கைகளைப் பரிஹரிக்கவேணுமானால் மதுராந்தக ஸம்ஸ்க்ருத கலாசாலை, திருமலை திருப்பதி ஸம்ஸ்க்ருத கலாசாலைபோன்ற விடங்களில் வாழும் அபக்ஷபாதிகளான—ருஜுமதிகளான வித்வத் வரிஷ்டர்கள் ப்ரவர்த்திக்கவேண்டும்.

விசேஷித்துச் சொல்லுகிறேன்.

திருமங்கையாழ்வார் பெரிய திருமடலில் திருப்பதிகளைப் பாடிவருகையில் "நான் வணங்குங் கண்ணனைக் கண்ணபுரத்தானை" என்றும் "என்னை மனங்கவர்ந்த வீசனை வானவர்தம் முன்னவனை" என்றும் சௌரிப் பெருமாளையும் தேவப்பெருமாளையும் விசேஷித்துக் கொண்டாடுகிறார். அதுபோல "நான் மதிக்கும் நல்ல நவநீத நண்பனை" என்னலாம்படி ஒப்பிலியப்பன் ஸன்னிதியிலே வாழ்பவரும் வித்யாபரிச்ராந்தரும் தேசிக திவ்யஸூக்தி பாராவார பாரங்கதரும் விவேகி வித்வத் ஸார்வபௌமரென்று நான் விருதிடப்பெற்றவருமான நவநீதம் ஸ்ரீராமதேசிகாசார்யர் ப்ரவர்த்திக்கவேணும். அல்லது அவருடைய திருவடிவாரத்தில் சிலவாண்டுகள் வாழ்ந்தால் பிறகு இவர் தாமும் ப்ரவர்த்திக்கலாம்.

ஏன்? இப்போதும் நான் சங்காபரிஹாரங்கள் பண்ணிவருகிறேனே யென்பரிவர். லகு சங்கைகளையும் குரு சங்கைகளையும் பரிஹரித்தே வருகிறாரென்பதை யாரே அபலபிப்பார்?

# தேசிக வைபவநூல்களின் தத்துவம்.

தேசிகனுக்கு எழுநூறாண்டு விழாக் கொண்டாட்டத்தை இவர்கள் பல லக்ஷக்கணக்கான ரூபாய்கள் செலவுசெய்து நிகழ்த்தியபோது தேசிக வைபவ வெளியீடுகளுக்கென்று ஒரு லக்ஷம் ரூபாய்களை ஒதுக்கி த்விதீய ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ர ஸ்வாமி தமிழில் பணித்திருந்த தேசிக வைபவத்தை இதர பாஷைகளிலும் மொழி பெயர்ப்பித்து வெளியிடுவித்திருக்கிறார்கள். (அதாவது) தமிழ், ஸம்ஸ்க்ருதம், ஆங்கிலம், ஆந்திரம் ஆகிய நான்கு பாஷைகளிலும் மிக அற்புதமான — கண்ணைக் கவரும்படியான பதிப்புகள் வெளிவந்துள்ளன. இதற்காக அதமபக்ஷம் நாற்பதினாயிரம் ரூபாய் செலவாகியிருக்கும். ஒவ்வொரு பாஷையிலும் ஐம்பதினாயிரம் பிரதிகள் (லக்ஷம் பிரதிகளும்கூட) அச்சிடச்செய்து த்வீபாந்தரங்களிலுங்கூடப் பரவவிட்டார்களாம். அந்த வைபவ நூலில் தங்கள் கொள்கைகளுக்கு மாறான விஷயங்களும் வெளிவந்திருப்பதை இரண்டொரு வருஷங்கழித்து ஒருவர் தெரிந்துகொண்டு "மறைத்திடவேண்டிய ஏடுகளை இப்படியா அம்பலப்படுத்தி அழச் செய்வது!" என்று கிளர்ச்சி செய்ய, அப்போது அந்த வைபவ முத்ராபகர்கள் "தேசிக திவ்ய க்ரந்தங்களில் நமக்கு அநுகூலமான விஷயங்களிருக்கின்றனவா? ப்ரதிகூலமான விஷயங்களிருக்கின்றனவா? என்பதைக்கூட விமர்சியாமல் அவற்றை மேன்மேலும் அச்சிட்டுக்கொண்டிருக்கிறீர்களே; அதற்கு இது குறைந்துவிட்டதோ?" என்று தர்க்கித்தார்களாம். இந்த தர்க்க விதர்க்கங்கள் இவர்கள் நிறுவிய குழுவில் இன்னமும் ஓய்ந்தபாடில்லை யென்கிறார்கள்.

இது இப்படியிருக்க இவர் " ஆகாசத்தை நோக்கியழுவன் தொழுவனே " என்கிற திருக்குடந்தைப் பாசுரத்தை உருப்போடுகிறார். ப்ராமாணிகரான திருவிண்ணகர் நவநீதம் ஆசிரியர் "தேசிக சரித்திரங்களில் உண்மையாகப் பல மாறுபாடுகள் நேர்ந்தே யிருக்கின்றன" என்று பதினைந்து வருஷங்களுக்கு முன்பு தம்முடைய ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரப் பதிப்பில் பொறித்துவைத்திருக்கிறார். இது த்ருதீய ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ர ஸ்வாமி பணித்ததாக இவர்கள் வெளியிட்ட வைபவத்தை நோக்கியது. இனி சதுர்த்த ப்ரஹ்மதந்த்ர ஸ்வாமி பணித்த வைபவம் எங்ஙனே யிருக்குமோ? என்று வெளிவருமோ?

# ஸ்ரீ வைஷ்ணவ ஸமாராதனகாரர்க்கு முக்கியமான 12 வார்த்தைகள்.

1. உம்முடைய சுவடியை திடீர்திடீரென்று எந்தபக்கம் பிரித்துப்பார்த்தாலும் "ஆலஸ்யம் கிம், அரசஸ்யம் கிம், புங்கஸ்யம் கிம், புளியஸ்யம் கிம்" என்றிப்படிப்பட்ட—அக்ஷராஸ்ய ரெழுதத்தகாத அஸதஸ்ய வார்த்தைகளையே மிகமிகக் காண்கிறோம். ஸ்ரீமத் தேரழுந்தூராண்டவன் ஆக்கூராண்டவன் போல்வார் ஸாதிக்கும் சுவைமிகக ஸூக்திகளை யெடுத்துக்காட்ட பாக்கியம் செய்திலீர்.

2. உமது சுவடியில் (பக்கம் 19ல்) "இதனால் காஞ்சீ ஸ்வாமியே எழுதினாரென்பது தெளிவு" என்றுள்ளது. நம்மாழ்வார் "தங்காமுயற்றியவாய்த்

தாழ்விசும்பின்மீது பாய்ந்து, எங்கேபுக்கு எத்தவம் செய்திட்டனகொல்!'' என்றொரு பாசுர மருளிச்செய்கிறார். நீர் எந்த மலைமேலேறி எத்தனைநாள் எத்தவம் புரிந்து இத் தெளிபொருளைத் தெளியப்பெற்றீரோ? செய்த தவத்தைச், சொல்லுமையா.

3. ஒருத்தி மதியெல்லா முள்கலங்கி — அன்று வெண்ணெய்வார்த்தையுள் என்னுமிடங்களிலுள்ள விசேஷங்களை நீர் அறியப்பெற்றது என்னுடைய நூல்களையே அல்லும் பகலும் வாசித்தன்றோ? இன்னமும் ஓய்வின்றி நமது நூல்களிலேயே போதுபோக்கி நவரத்னங்களும் கொள்ளைகொண்டு அநுபவித்து அகமகிழ்வீராக.

4. நமது நூல்களில் நிந்தாபரிஹாஸங்கள் மலிந்திருப்பதாக எழுதுகிறீர். ஸச்சரித்ரரக்ஷை தொடங்கும்போதே *ப்ரஹராமி மூர்க்காந்* என்கிறார். சததூஷணியில் உத்தமாச்ரமிகளை நோக்கி ''ஸந்த்யா வந்தனவேலாயாம் முக்தோஹமிதி மந்யஸே, கண்டலட்டுகவேலாயாம் தண்டமாதாய தாவஸி.'' ''கந்தாம் வஹஸி துர்ப்புத்தே! கர்தபைரபி துர்ப்பராம், சிகாயஜ்ஞோபவீதாப்யாம் கஸ்தே பார: ப்ரஸஜ்யதே?'' என்கிறார். இவற்றை நோக்குங் கண்ணாலே நோக்குக.

5. ஆத்மஸ்துதிகளுமுள்ளன வென்கிறீர். *தோன்று தோற்றித் துறை பல முடிப்பினும், தான்தற்புகழ்தல் தகுதியன்றே* என்ற நன்னூலாசிரியர் தாமே *மன்னுடை மன்றத்து...தன்னுடையாற்றலுணராரிடையினும், தன்னை மறுதலை பழித்த காலையும், தன்னைப் புகழ்தலும் தகும் புலவோற்கே* என்றார். *மத்த: ப்ரத்யவர: கச்சிந்நாஸ்தி ஸுக்ரீவஸந்நிதௌ* என்பவரான திருவடிதானே *பந்நகாசநமாகாசே பதந்தம் பக்ஷிஸேவிதே, வைநதேயமஹம் சக்த: பரிகந்தும் ஸஹஸ்ரச:* என்கிறாரே. *கோ வா சக்ஷுருதஞ்சயேதபி...ரஞ்ஜஸ்வாதேஷு வாதேஷு ந.* என்கிறார் ஸ்வாமி ஸப்ததியில். ஆளவந்தார் ஸ்ரீஸூக்தி ஸுப்ரஸித்தம். நீ ஆளவந்தாரா? தேசிகனா? என்பீர்; ஸ்ரீவைஷ்ணவஸ்வரூப பரிபாலனவச்யகதை ஸர்வத்ர ஸமானம். காலவிசேஷங்களில் வரம்பு கடந்தாலும் பெரியார் காட்டின வழியேயாம்.

6. வடகலை ஸம்ப்ரதாயத்துப் பெரியார்களை க்ருஹஸ்த ஸம்ந்யாஸிவிபாக மற வருத்தும் வார்த்தைகளை யெழுதிவருகிறோமாகப் புலம்புகிறீர். உண்மைகேளீர். என்னுடைய வாழ்நாளில் வடகலை ஸம்பிரதாயத்தில் க்ருஹஸ்தர்களாயும் உத்தமாச்ரமிகளாயுமுள்ள வித்வான்களின் புகைப்படங்களை ஆர்ஜித்து ப்ளாக்குகள் செய்வித்து அவரவர்களின் வைபவாதிசய வர்ணனங்களோடுங்கூட நாம் வெளியிட்டிருக்கும் புத்தகங்கள் உலகம் பரவியவை. அவற்றுள் ''வைதிக லௌகிக மஹநீய மண்டலி'' என்பது தலையான புத்தகம். ஒரு Card எழுதுகிறவர்களுக்கு இலவசமாக அனுப்புவோம். அஸூயாப்ரவாஹத்தினால் ஏதுக்கு ஆத்மாவை வஞ்சிக்கிறீர்?

7. லய ப்ரலய பங்க க்ஷயாதி பதங்களின் சக்தியை யுணராமல் ஒரு சோத்யம் செய்திருக்கிறீர். (அதாவது) *அபார்த்த ப்ரலயப்ரவீணை:* என்பதற்கு எப்படி ஸமாஸமென்று கேட்கிறீர். இதற்கு விடையிறுக்க நமக்கு அவசியமில்லையாயினும் மருண்டவர்களின் மருளை யொழிப்பது நமது கடமை யாதலால் தெளிவிக்கிறோம். *ஜநிகர்த்து: ப்ரக்ருதி:* என்கிற வியாகரண ஸூத்ரப்படி ஜாயமாந வ்யக்தியையே ஜந்மகர்த்தா வென்னவேணும். ஆயினும் ஜநயிதாவையும் ஜந்மகர்த்தாவாகச்

சொல்வதுண்டு. *ஜகதுத்பவஸ்திதி ப்ரணச ஸம்ஸார விமோசநாதய: லீலாபவந்தி* என்று ஆளவந்தாரும் *அகிலபுவநஜந்மஸ் தேம பங்காதி லீலே* என்று பாஷ்ய காரரும் ஸாதித்தவிடங்களில் ப்ராப்தமான விசாரத்திற்கு நீர் அத்யந்தவிஷ்டர். தேசிகன் பரமதபங்கமியற்றினர். (நீரும் நுமரும் பரமபதபங்கமென்றே சொல்லி வரலாம், அதுபற்றி இங்கு விசாரமில்லை.) பங்கமென்பது பரமத நிஷ்டமே யொழிய தேசிக நிஷ்டமன்று. தேசிகன் வெற்றிபெறுகிறரே யொழிய பங்கமடை கின்றிலர். பரமத பஞ்ஜனமென்கிறவிவக்ஷையில் பரமதபங்க மென்றார். போதும்.

8. ஒருவர் ஆண்டவன் திருவருள் என்றொரு நூலெழுதி 'இங்கு ஆண்டவ னென்றது ஸர்வேச்வரனை' என்று குறிப்புரையெழுதினராம். அதற்கு நீர் மறுப் பெழுதியதாவது, ஆண்டவன் ஆண்டவர் என்றால் ஆண்டவனென்று வழங்கப் படுகிற யதிகளையே குறிக்குமென்று. *ஒரு நாயகமாயோட வுலகுடனுண்டவர் கருநாய் கவர்ந்தகாலர் என்கிற பராங்குசன் பாசுரமும், ''பாண்டேன்வண்டறையும் ......ஆண்டவரே மாண்டார்'' என்கிற பரகாலன் பாசுரமுங்கூட உமது கருத்தையே நிலைநாட்டட்டுமே.

9. மைஸூர்பாகு, காசியல்வா கதைகளோடு நிற்கவேண்டிய உமக்கு இத்த கைய ப்ரஸங்கங்கள் ஏதுக்கு? ப்ரியஸுஹ்ருந்மணியின் ஜாமாதாவென்கிற முறையில் ஹிதமுரைக்கிறபடி. விரலுக்குத்தக்க வீக்கமே உரியது. ''சாகாநுகுணச் சோப:.'' என்றொரு வடமொழி நூல் எழுதி வெளியிட்டிருக்கிறேன் மஞ்ஜுபாஷிணியில். சாகா—விரல். சோப: — வீக்கம். அஜ்ஞானத்தைப் போக்கிக்கொள்ள வழி களுண்டு; ஸ்வாஜ்ஞாநாஜ்ஞானத்தைப் போக்கிக்கொள்ள அந்தோ வழியில்லையே. நீர் உச்சிமேல் வைத்து மெச்சுகிற ஆண்டவன் திருவருள் நானே மறைமுகமா யிருந்து வெளியிட்டதாகவே உண்மை யிருக்கட்டுமே. என்ன ஹானி? யத் வா ம்ருகம் ம்ருகயுவந் ம்ருகயாபதேநச் சந்நோ ஜகந்த ந து சத்ருவதாபி முக்க்யாத்: தத் யுக்தமேவ தவ ராகவவம்ச ஜஸ்ய திர்யக்ஷு நைவ ஹி விபக்ஷதயோபசார:'' என்கிற அதிமாநுஷஸ்தவ ஸூக்தியை அநுஸந்தித்து ஸமாஹிதராகக் கடவீர். இதன் பொருளை நமது வியாக்கியானங்கொண்டு அறிவீராக.

* சதுர்தச ஸஹஸ்ராணி ரக்ஷஸாம் பீமகர்மணாம் என்னப்பட்டவர்கள் நொடிப்பொழுதில் மாண்டபடியைக் கண்டு வைத்தும் மேன்மேலும் வந்து விழுந்து மடிந்தார்களென்கிற கதை மெய்யா யிருக்குமா? என்கிற நெடுநாளைய ஸந்தே ஹம் தீர்ந்தது உம்மால்.

10. எனது நூல்களில் பலகால் எடுத்தாளப்படுகிற ''தெரித்தெழுதி வாசித் துங்கேட்டும் வணங்கிவழிபட்டும் பூசித்தும் போக்கினேன் போது'' என்கிற திருமழிசைப்பிரான் பாசுரத்தை யெடுத்துக் கொதிக்கிறீர்; உண்மையில் கடல் சூழ்ந்த மண்ணுலகில் இக்காலத்தில் இப்பாசுரம் பொருந்துவது என்னொருவனுக்கே யாம். [தெரித்து] ஸகலார்த்தங்களையும் உபந்யாஸமுகத்தாலே தெரிவித்து. [எழுதி] ஆழ்வார்களுடையவும் ஸகலபூர்வாசாரியர்களுடையவும் த்ராவிட ஸம்ஸ்க்ருத ஸ்ரீஸூக்திகளுக்கெல்லாம் ஒன்று விடாமல் வியாக்கியானங்களெழுதி. [வாசித்து] பூர்வாசார்ய ஸ்ரீஸூக்திகளை நித்யபாராயணம் செய்துகொண்டு. [கேட்டு] பரீக்ஷ யர்களிடத்தில் ப்ரச்னங்கள் பண்ணியும், ஸுஷ்டுப்ரவக்தாக்கள் பக்கலிலே

ச்ரவணம் பண்ணியும். [வணங்கி வழிபட்டும் பூசித்தும்] அர்ச்சாவதாராநுபவங்களிலே சிறிதளவும் குறைய நில்லாமலும் போக்கிவருகிறேன் போதை—என்று மார்புதட்டிச் சொல்லுவதற்கு யானே தவஞ்செய்தேன்.

11. *ஸுஹ்ருதம் ஸர்வபூதாநாம்* என்றிருக்கிற ஸர்வேச்வரன் சிலரைவாழ்வித்துச் சிலரை முடிப்பது எங்ஙனே? என்று கேட்பார்க்கு ஆசாரியர்கள் பணிக்கும்படி—ஸர்வேச்வரன் முடிக்க நினைக்கிறானல்லன்; விளக்கிலே விட்டில்கள் தானே விழுந்து மடியுமாபோலேயும், குடிக்கக் கல்லினதடாகத்திலே சிலர் கழுத்திலே கல்லைக்கட்டிக்கொண்டு விழுந்து சாமாப்போலவும் தாமே வந்து விழுந்து முடிகிற வித்தனை என்பார்கள். இது அந்தோ! உம்மிடத்திலுமா பலிக்கவேணும்?

12. முடிவான வார்த்தை உமக்கு இது. வேங்கடாத்வரி கௌஸ்துபத்தில் "வாசாடோக்தௌ வாகம்ருதே வா ஸுகவீநாம் ஸ்தேநகப்ரஜ்ஞாஸ் துல்யத்ருசோ ஹந்த! பவந்தி, கோமாயூநாம் கோகிலயூநாமபி சப்தேஷு ஏகாகாரா மாநஸவ்ருத்திர் மஹிஷாணும்" என்று அற்புதமாக மொழிந்தார். அந்த மஹிஷ ஸத்ருசர்களும் மதிக்கமாட்டாத உமது சுவடியில் நாம் விடையிறுக்கவேண்டிய ஸத்விஷயம் லவலேசமுமில்லை. ஏனில்லை; பலபல வுள்ளன என்பீரேல், கீழே சில ப்ராமாணிக வித்வான்களின் திருநாமங்களை நிர்தேசிக்கிறேன்; இவர்களில் யாரேனுமொருவருடைய ஸந்நிதியில் உமது சுவடியைக் காட்டி அவரிடம் அபிநந்தன பத்திரிகை வாங்கி வெளியிடுவீராக. நீர் எழுதியிருக்கும் விஷயங்களை அவர் தமது வாக்காலே அநுவதித்து 'இது யுக்தமாக எனக்குத் தோன்றுகிறது' என்றிவ்வளவு இருந்தால் போதும்.

— வித்வான்களின் திருநாமம் —

1. ந்ருஸிம்ஹப்ரியாஸம்பாதகர்
2. ஸ்ரீரங்கநாதபாதுகாஸம்பாதகர்
3. N.S. ராமாநுஜாசாரியர் (திருப்பதி)
4. குளித்தலை நடாதூர். ராகவாசாரியர் (உமதுமாமனுர்)
5. மதுராந்தகம் ஈச்சம்பாடிஸ்வாமி (ஸ்ரீரங்கம்)
6. ,, பாதூர். ராகவாசார்ய ஸ்வாமி
7. உத்தரமேரூர் வாஸுதேவாசார்ய ஸ்வாமி
8. தையார் வங்கீபுரம் ரங்கராஜாசார்ய ஸ்வாமி (ந்யாயவித்வான்)
9. ராமாயணபூஷணம் கோமல் ஸ்வாமி
10. விவேகி வித்வத் ஸார்வபௌமர்—திருவிண்ணகர்
11. புநர்வஸுபத்ராதிப ஸ்வாமி
12. நாவல்பாக்கம் நரஸிம்ஹதாதாசாரியர்.

இவர்களுள் உமது மாமனாகிய நடாதூர் ராகவாசார்ய ஸ்வாமி மிக முக்கியமானவர். *ஸ பித்ரா சபரித்யக்த:* என்றதுபோல *ச்வசுரேண பரித்யக்த:* என்னும் நிலைமையை முன்னம் காணுமுலகம்.

ரத்நகிரீடமநர்க்க மபூர்வம் சிரஸி பிபர்ஷி ஸதா யதி ஸௌம்ய,
நிகமசிரோகுருஸூக்திரஸஜ்ஞோ நியத மவாப்ஸ்யஸி நிர்மலவிஜயம்.

✽ தேசிகபக்த ரத்னகிரீடம் முற்றிற்று. ✽

## யதார்த்த ராமாநுஜனெண்பத்திரண்டின் முடிவு

28—6—72 முதல் 10—7—72 வரை திருமலையில் நடைபெற்ற ஸ்ரீ லக்ஷ்மீ நாராயண மஹாக்ரதுவில் அந்வயிக்க வந்திருந்தவர்களில் ஸ்ரீ வைஷ்ணவ பண்டிதர்கள் 250 திருநாமங்களுக்குக் குறையில்லை. அவர்களுள் விவேகிகளும் வாவதூகர்களுமான சிறந்த பண்டிதர்கள் 200 திருநாமங்கள் தேறினார்கள். அவர்களில் ஒருவர் தப்பாமல் அனைவரும் யதார்த்த ராமாநுஜ னெண்பத்திரண்டை [இரண்டு எண்பத்திரண்டையும்] பூர்த்தியாக வாசித்து ஏகமுகமாகச் சொன்ன வார்த்தை ஒன்றே;—"யதார்த்த ராமாநுஜ னென்கிற நிந்தைக் கந்தையை நாங்கள் ஒருவரும் பார்த்ததில்லை; அது எங்களுக்கு எட்டவுமில்லை; ஆனாலும் அதைப் பார்த்தவரான ஸ்ரீ உ. வே. மதுராந்தகம் ஸ்வாமி அது காசுக்கு முதவாத கந்தை யென்றும், பூர்வோத்தர விருத்தங்களான பேச்சுக்களும், ஆதுநிகர்களோடு பூருவாசாரியர்களோடு வாசியற எல்லாரையும் திட்டுவதும் தவிர வேறொன்றும் அதில் கிடையாதென்றும் பலர்முன்பே ஸாதிக்கக் கேட்டவர்கள் பலருளர். அதைப் பொருள்படுத்தி இவ்வளவு விரிவு மிகவும் அவசியமற்றதென்றும் சொல்லி, திருமங்கையாழ்வாருடைய பெரிய திருமொழியில் *கோழி வெண்முட்டைக்கு என்செய்வதெந்தாய்! குறுந்தடி நெடுங்கடல்வண்ணா !* என்கிற பாசுரம் தேவரீருக்குத் தெரியாததன்றே" என்று தலைக்கட்டினார்கள்.

பெரிய திருமொழியில் பத்தாம்பத்தில் ஒன்பதாவது பதிகம் "பழமொழியால் பணிந்துரைத்த பாட்டிவை" என்று ஆழ்வார் தாமே நிகமித்தருளினபடியே ஒவ்வொரு பாட்டும் பழமொழியொன்று கொண்டது. அதில் ஏழாவது பாட்டில் "கோழி வெண்முட்டைக் கென்செய்வ தெந்தாய்! குறுந்தடி" என்றுள்ளதை ரஸிக வித்வான்கள் நினைவூட்டிய பின்பு உண்மையில் லஜ்ஜையே யுண்டாயிற்று. இந்த பிரதிவாதி நாம் நம்முடைய மதத்தை ரக்ஷிக்கப் பின்னடையமாட்டோ மென்றெழுதினர். அதற்கு நாம், தேரழுந்தூராண்டவன் ஸாதிக்கக் கேட்டிருந்த செவிலிமேட்டு மாந்தோப்புக் காவற்காரன் கதையை யெழுதி யிருந்தோம். அதுதான் மிகப்பொருத்தமான த்ருஷ்டாந்தமென்று பேசாதவர்களும் எழுதாதவர்களுமில்லை. நாமெழுதிய பல விஷயங்களுள் "தேசிகன் பெரியவாச்சான்பிள்ளை ஸ்ரீ ஸூக்திகளையே தஞ்சமாகக் கொண்டவர்" என்பதும், "பிள்ளான் ஸ்ரீ ஸூக்தியில் ஒன்றையும் தழுவாததோடு அவருடைய ஸ்ரீ ஸூக்தியைக் கண்டித்துமிருப்பவர்" என்பதுமே தலையான விஷயம். இதில் இவர் தம்மினத்தாரெல்லாரோடுங் கூடி வாதித்தாலும், வர்ஷசதம் வாதித்தாலும் பயன்பெற மாட்டாரென்பது திண்ணம். ரஹஸ்யத்ரயஸாரத்தில் அர்த்தமில்லாத வாக்யங்கள் பல; பரஸ்பரவ்யாஹதங்களான வாக்யங்கள் பல. இது ப்ரதிஜ்ஞாமாத்ரத்தோடு நிற்பதன்று, பலகால் பலநூல்களில் வடமொழி தென்மொழிகளில் *வாய்திறக்க வழியுண்டோ வென்று பலரும் பேசும்படி யெழுதியுள்ளேன். இவரும் இவரைச்சேர்ந்தவர்களும் நிந்தாபிச்சேஷபூரணம் பண்ணிக்கொண்டு கிடக்கலாமத்தனையன்றி வேறொன்றும் செய்யப்போகாது.

## அனைவரும் கவனிக்கவேணும்

இவரை நோக்கியும் இவரைச் சேர்ந்தவர்களை நோக்கியும் ஐம்பது வருடங்களுக்கு மேலாக நாம் நமது பத்ரிகைகளிலும் தனி நூல்களிலும் எழுதிவரும் விஷயங்கள் இரு வகுப்பானவை. (முதல்வகுப்பு.) இவர்களது கொள்கைகள் தேசிக திவ்யஸூக்திகளோடு சிறிதும் ஸம்பந்தப்படாதவை யென்பதாம். (இரண்டாம் வகுப்பு) ஒருகால விசேஷத்தில் (சென்ற நூற்றுண்டில்) கோவில் சண்டைகளைக் கிளப்பத் தொடங்கிப் பல கற்பனைகளைச் செய்துவைத்திருக்கிறுர்களென்பது. இவ்விரண்டைப் பற்றியும் இப்போது நமது நிகமன வார்த்தைகள் கேளீர். [முதல் வகுப்புக்கு] ''ஸ்ரீலோகாசார்ய ஸித்தாந்தஸாரம்'' என்ற மகுடத்தின்கீழ் ஸ்ரீராமாநுஜனில் சென்றவிதழிலும் இவ்விதழிலும் தென்னுசார்ய ஸித்தாந்த ஸாரத்தை வெளியிட்டிருக்கிறோம். இதில் கிஞ்சித் சேஷமிருந்தாலும் அது விரைவில் (அடுத்த இதழில்) பூர்த்தியடையும். இது நமது வைதிகமநோஹராவில் ஸம்ஸ்க்ருதத்திலுமுள்ளது. இதேபோல் ''ஸ்ரீமத்வேதாந்ததேசிக ஸித்தாந்த ஸாரம்'' என் மகுடமிட்டு இதே விஷயங்களில் தேசிகன் திருவுள்ளத்தை நிரூபிக் கட்டுமிவர்கள். (இரண்டாம் வகுப்புக்கு) இவர்களுடைய கற்பனைகளின் தத்துவத்தை (அல்லது) மருமத்தை நாம் கண்டுபிடிக்க முயன்றது எப்போதென்றால்; ஸ்ரீவைஷ்ணவவுலகமெல்லாம் கொண்டாட நின்ற ஸ்ரீமந் வேங்கடநாதார்ய தனியனை விட்டிட்டு ராமாநுஜதயாபாத்ர மென்கிற ஒரு சுலோகத்திற்கு — நீதிமன்றங்களிலெங்கும் நிராகரிக்கப்பட்ட சுலோகத்திற்கு — அவதாரஸ்தலத்திலும் விலைசெல்லகில்லாத சுலோகத்திற்கு — ஒருபவனத்தில் ஷட்சதாப்தியென்று கொண்டாடத் தொடங்கினர்களே, அப்போதுதான் தூப்புல் என்கிற சொல்லைப்பற்றியே முதன்முதலாக ஆராய்ந்தோம். காஞ்சீபுரத்தில் விளக்கொளி ஸன்னிதியில் த்விர தேவப்பெருமாள் ஸன்னிதியிலும் தேசிகன் எழுந்தருளியிருக்கிறுர்; வேகவதிக்கரையில் ஸ்ரீரங்கராஜவீதி யென்கிற புதுத் தெருவிலும் நூதன நிர்மாணமாக தேசிகன் எழுந்தருளியிருக்கிறுர். இவ்விடங்களிலும் பரிவட்டம் கட்டி மரியாதை செய்ய ப்ராப்தமாகும் ஸமயங்களில் அருளப்பாடு தூப்புல் வேதாந்த தேசிகனென்றே (இவர்கள்) கட்டியம் சொல்லக் கட்டளையிட்டிருக்கிறுர்கள். இதை விவேகிகள் ஆராயலாமே. ஸ்ரீபெரும்பூதூரெம்பெருமானுரென்றே, பூனமல்லி திருக்கச்சிநம்பிகள் என்றே, காட்டுமன்னர் ஸன்னிதி நாதமுனிகள், ஆளவந்தார் என்றே எங்கேனும் சொல்லுவாருண்டோ? எம்பெருமானர் காலத்தில் எங்களாழ்வானென்றும் நடாதூராழ்வானென்றும் சோகத்தூராழ்வானென்றும் வேறு சில ஆழ்வான்களும் ப்ரஸித்தர்களாக எழுந்தருளியிருந்தபடியாலே தத்வ்யாவ்ருத்திக்காகக் கூரத்தாழ்வானென்று வழங்கிவரலாயிற்று. தூப்புல் சொல்லால் வ்யாவர்த்திக்கப்படுவது எது? என்று கேட்டால் வாய்திறப்பாருண்டோ? தேசிகனுடைய திருவவதாரஸ்தலம் திருத்தண்கா என்பதாக ஸம்ப்ரதாய ஸித்தம். இதை தேசிகன் தீபப்ரகாச ஸ்துதியான சரணுகதி தீபிகையில் ஹிமோபவனமென்றும் சிசிரோபவனமென்றும் மொழிபெயர்த்துள்ளார். தூப்புல் என்றே தூப்பல் என்றே தூப்பில் என்றே இருந்தால் அதை மொழி பெயர்க்காது விட்டிருக்கமாட்டார். அவருடைய நிர்விவாதமான தமிழ்ப் பாட்டுகளிலும்

இது இடம் பெற்றிருக்கவில்லை. அப்பய தீக்ஷிதர் அங்கு தும்பைவனமென்று அக்ரஹார ப்ரதிஷ்டை செய்தபிறகு அதற்குக் கொச்சை நாமமாகத் துப்பில் என்று வழங்கத் தொடங்கினார்கள். க்ருஷ்ணமாசார்ய வெங்கடாசார்ய சேஷாசார்யாதிகளை கிச்சு, கிட்டு, வெங்கட்டு, சேச்சு, பாச்சு என வழங்குதல்போல.

புதுத் தெய்வங்கொண்டாடத் தொடங்கி நவீன கற்பனைகள் செய்யப் புகுந்த காலத்திலே விளக்கொளி ஸன்னிதி பரிஸரத்தை அங்குள்ளார்மட்டும் துப்பில் என வழங்கிவந்திருக்கக் கூடும். அதன் மருமமறியாமல் அதைப்பிடித்துக் கொண்டார்கள் நவீனர்கள். அப்போதே ஸ்யூத்யர்கள் பலர் ஆக்ரோசம் செய்ததாகவும், அதை விடமாட்டாத பிடிவாத மிகுதியினால் தேசிக விக்ரஹம் எந்த இடத்திலிருந்தாலும் தூப்புல் சொல்லைச் சேர்த்தே கட்டியம் சொல்லவேண்டியதென்று பிடிவாதக்கார வகுப்பினர் திட்டம் செய்ய அதுவே தொடர்ந்து வருவதாகவும் கீர்த்திமூர்த்தியான வித்வான் பகல் தீவட்டி. ராகவாசாரியர் ஸ்வாமி நாடுநகரமும் நன்கறியச் சொல்லிவந்தார்.

இந்தத் தூப்புல் விஷயத்தைச் சிலபலவாண்டுகட்கு முன்பு முதன் முதலாக அடியேனெழுதி வெளியிட்டபோது, இதற்கு மறுப்பெழுதத் தொடங்கின ஸ்ரீமான். அய்யாக்ருஷ்ணதாதாசாரியர் "பழநடை விளக்கத்தில் அண்ணவப்பங்கார் தேசிகனைப் பற்றி யெழுதுகையில் 'தூப்புல்பிள்ளையை முனிந்தோம்' என்று ஸ்ரீரங்கநாதன் வெறுத்துரைத்ததாக எழுதியிருக்கையாலே தேசிகன் காலத்திலேயே ஸ்ரீரங்கத்திலும் தூப்புலென்கிற சொல் ப்ரஸித்திபெற்றிருந்ததை யறியலாம்" என்றெழுதினார். அப்போதே அன்றே நாமெழுதியது—இதனால் ரங்கநாதன் முனிந்த கதை ஸ்தாபிதமாகுமேயொழிய வேறொன்றும் தேறாது என்று. விளக்கொளி கோவில் விஷயமாகவும் அவ்விடத்து தேசிகன் ஸன்னிதி விஷயமாகவும் எண்ணிறந்த வியாஜ்ஜியங்கள் நடந்திருக்கின்றன. தூப்புலென்ற சொல் ஒன்றிலும் புகுந்திருப்பது கிடையாது. முனிசிபாலிடி யேடுகளொன்றிலும் ஏறியிருப்பதுமில்லை. திருத்தண்கா என்கிற விலக்ஷணமான சொல்லை எதற்காக இவர்கள் விட்டிட்டார்கள்? என்று கேட்டால் நான்முகனைப்போல் திசைதொறும் விழிக்கவேண்டியதுதவிர வேறில்லையென்று தெரிவித்து இந்த வம்புவிசாரத்தில் நின்றும் விரதராகிறோம்.

"விவக்ஷிதம் ஹி அநுக்தம் ஆகுலீகரோதிஹ்ருதயம்" என்பது காளிதாஸ கவியின் வாக்கு. இவர்களைப்பற்றி நமக்கு விவக்ஷிதங்கள் பலபல வுண்டு. "இவை பின்னும் வயிற்றுள" என்கிறார் ஆழ்வாரும். ஒன்று கேளீர். (அலங்கார சாஸ்த்ரத்தில்) சந்த்ராலோகத்தில் "ஸஹஸ்வ கதிசிந்மாஸாந்மீலயித்வா விலோசநே" என்றொரு லக்ஷ்யம் காட்டியிருப்பது ப்ரஸித்தம். ஒரு நாயகி நாயகவிச்லேஷ துக்கம் பொறுக்கமாட்டாமல் துடிதுடிக்கிறாள். அவளைநோக்கித் தோழி சொல்லும் வார்த்தையிது. 'நங்காய்! கண்ணை மூடிக்கொண்டு சில மாதங்கள் பொறுத்திரு' என்பது இதன் பொருள். பல்லைக் கடித்துக்கொண்டு பொறுத்திரு, கண்ணை மூடிக் கொண்டு பொறுத்திரு, என்று சொல்லித் தேற்றுவது உலக வியற்கை. (ஸஹஸ்வ)

என்று சொல்லும்போது அந்த நாயகியின் நிலைமை எப்படிப்பட்டதா யிருந்தது? என்று கேட்டால் மிக்க பரிதாபங்கொண்ட நிலையிலிருந்தது என்றல்லது வேறொன்றும் சொல்லப்போகாது. இதனால் ஸஹ்யமான நிலையொன்றும் அஸஹ்யமான நிலையொன்றும் தெரியவரும். பரிதாபத்தை வெளிக்காட்டாத நிலை முதலது; அதை அளவுகடந்து காட்டும் நிலை இரண்டாவது. இது சிரமப்பட்டுத் தெரிந்துகொள்ள வேண்டிய விஷயமன்று. (நாயகவிரஹம் நாயகீ ந ஸஹதே) என்றால் நாயகி பிரிவாற்றாது துடிக்கிறாளென்பது அநாயாஸமாகத் தெரியவரும்.

ஆளவந்தார் எம்பெருமானுடைய குணவிசேஷத்தையும் *வாஸுதேவஸ் ஸர்வமென்றிருக்கிற மஹாத்மாக்களின் பெருமையையும் அநுபவிக்க விரும்பி ஸாதித்தருளின *ஸக்ருத் த்வதாகாரவிலோகநாசயா* என்கிற ச்லோக ரத்னத்தில் ''யத்விரஹ: க்ஷணேபி தே அதிதுஸ்ஸஹ:, தைர் மஹாத்மபி: அவலோக்யதாம் மாம் நய'' என்று அரஸிகர்களும் கண்ணநீர் பெருக்கும்படி கூறியிருக்க, ''இங்கே (அதிதுஸ்ஸஹ:) என்பதனால் கேதம் விவக்ஷிதமன்று. அந்த மஹாத்மாக்களின் பிரிவை யுண்டாக்கமாட்டானென்றபடி' 'என்றெழுதி வைப்பவர்களைப்பற்றி என்ன சொல்லுவது! ஒருவன் பாம்புகடித்துத் துடியாநிற்க, 'இவன் துடிக்கிறானல்லன்; பாம்பு கடியாதபடி பார்த்துக்கொள்ளவேணுமென்கை'' என்னுமாபோலே யன்றோ இவ்வுரையுள்ளது!

பிராட்டி புருஷகாரக்ருத்யம் செய்வதொன்றிலேயே ஊன்றினவளென்றும் புருஷார்த்தமளிப்பவன் பரமபுருஷனே யென்றும் பலவிடங்களில் வடமொழி தென்மொழி வாக்யசதங்களாலே நிலைநாட்டிவிட்டு, இடையிடையே சித்த விப்ரமங்கொண்டு ஒன்றோடொன்று இணங்காதபடி யெழுதிப் போருமிடத்தில் அலமேஷா பரித்ராதும் ராகவாத் ராக்ஷஸீகணம்...ராக்ஷஸ்யோ மஹதோபயாத்'' என்கிற பிரமாண வசனங்களை அடுக்கிக்கொண்டுபோகிற வொரு சுவடியை வைத்துக்கொண்டு காலக்ஷேபம் பண்ணிவருமவர்களை மஹாபேதாவிகளென்றும் மஹாரஸிகர்களென்றும் மஹா ப்ராஜ்ஞர்களென்றுங் கொண்டு வழிபாடு செய்யுமவர்களை விலக்குவாராருமில்லை.


''பரமபதபங்க காலக்ஷேபம் ஆச்சரியமாக ஸாதித்தாகிறது; பரமபதமில்லை யென்பவர்களை சரமாரியாகக் கண்டித்தாகிறது'' என்று வியக்கும் சிஷ்ய ஸம்ருத்திக்குப் பல்லாண்டு பாடுவோம். இவர்கள் எத்தனை புத்தகங்களில் பரமபதபங்கமென்று வெளியிட்டிருக்கிறார்களென்பதை, வி. பூதூரில் வாழும் உயர்திரு. வித்துவான் வெங்கடசாமி ரெட்டியார் எடுத்துரைத்துக் குலுங்கக் குலுங்க நகைத்ததை மறக்க முடியவில்லை.

இதையெல்லாம் வாசிக்கும்போது இவர்களுக்குக் கோபமும் தாபமும்மிக்கு *ஸம்தாபயதி ஸ்வம் தேஹம் ஆபாததலமஸ்தகம்* என்னும் நிலையேயாகும். இவர்களெழுதும் கொடிய கடிய வாக்கியங்களைக்கண்டு நாம் பரிதபிப்பதில்லை, விடையிறுத்து மகிழ்ந்து மகிழ்விக்கிறோமத்தனை.

இவ்வளவோடு முடித்து நிற்கிறோம்.

——:O:——

# ஸ்ரீ ராமாநுஜன் - 286.



சென்னை ஸத்க்ரந்த ப்ரகாசன ஸபா மூலமாக மாதந்தோறும்
வெளிவரும் பத்திரிகை.

ஆசிரியர்: ஸ்ரீகாஞ்சீ. P. B. அண்ணங்கராசாரியர்.

| ஸம்புடம் 24 | பரீதாவி௵ ஆடி௴ 15—8—72ல் வெளியிடப்பட்டது | ஸஞ்சிகை 10 |
|---|---|---|

## நமது நேயர்களுக்கு அறிக்கை

சென்ற ஜனவரிமாதத்திற்குப் பிறகு சந்தா செலுத்தியுள்ளவர்கள் தவிர மற்றவர்கள் இந்த ஆகஸ்டுமாத முடிவுக்குள் ஞாபகமாய் சந்தாப்பணம் அனுப்ப வேண்டும். ஸாதாரணவாண்டில் ரூ. 25 செலுத்தினவர்கள் பாதி சந்தாவாவது கட்டாயம் அனுப்பவேண்டும்.

இப்படிக்கு—மானேஜர்.

---

## மிக மிக வருந்துகிறோம்

திருவல்லிக்கேணியிலிருந்து பக்தன் என்கிற பத்ரிகை மாதந்தோறும் வெளி வந்து ஆஸ்திகர்களை உகப்பித்துவரும் விஷயம் உலகமறிந்தது. அதன் ஆசிரியரான ஸ்ரீமான் M. O. அழகசிங்கராசாரியர், B. SC. B. L. அவர்கள் சென்றமாத முடிவில் இம்மண்ணுலகை நீத்து விண்ணுலகெய்திய செய்தி பத்திரிகைகள் மூலமாக உலகம் பரவியுள்ளது. இது மிகவும் வருந்தத்தக்க செய்தி. இப்பெரியார் பல வாண்டுகளாகவே உடல்நலமின்றி அடிக்கடி சிகித்ஸை பெற்றுவந்தார். இன்னும் பலவாண்டுகள் வாழ்ந்திருந்து லோகோபகாரமாகப் பல பணிகள் செய்யவேண்டிய வர் இவர். இவரை அஜாத சத்ருவென்றே உலகம் கூறும். இவருடைய பிரிவிற்கு மிகவும் வருந்துகிறோம். ... ... ... ...

# திருமலையில் நியாய ஸித்தாஞ்ஜன சர்ச்சை

ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி. ஸ்ரீமந்நாராயண ராமாநுஜ ஜீயர் ஸ்வாமீ நேற்று ஆனி மாதத்தில் திருமலையில் நடத்திய ஸ்ரீ லக்ஷ்மீநாராயண மஹாக்ரதுவில் இதிஹாஸபுராணபடன வகுப்பில் நியமனம் பெற்றிருந்தவொரு பண்டிதர் [ஸ்ரீ விஷ்ணுபுராணம் ஸேவிக்க வேண்டியவர்] பெரும்பாலும் நியாய ஸித்தாஞ்ஜந ஸ்ரீ கோசத்தை வைத்துக்கொண்டு பார்த்து வந்தாராம். இதை கவனித்த அவர் பக்கத்துப் பாராயண ஸ்வாமியொருவர் பர்யவேக்ஷகரிடத்தில் தெரிவிக்க, அவர் வந்து விசாரித்தபோது ஏதோ ஸமாதானம் சொல்லி, பிறகு ஸ்ரீ விஷ்ணுபுராணமே ஸேவித்து வந்தார். அந்த ஸ்வாமி எனக்கு மிகவும் ஸ்நிக்தராகையாலே அடிக்கடி என்னோடு ஸல்லாபம் செய்ய என் விடுதிக்கு வந்துகொண்டிருந்தார். வருகிற போதெல்லாம் நியாய ஸித்தாஞ்ஜந ஸ்ரீகோசத்தை உடன் கொண்டுவருவர். ஸ்ரீமதாண்டவன் ஸ்வாமி அடுத்த மாதத்தில் இதில் பரீக்ஷை வைத்திருப்பதாகவும், அதில் தாம் அந்வயிக்க விரும்பியிருப்பதால் அதில் அநவரதபரிசயம் செய்துகொண்டிருப்பதாகவும் தெரிவித்தார். பரீக்ஷையில் நான்கு கேள்விகள் மட்டுமே கேட்கப் போவதாகவும் ஒவ்வொரு கேள்விக்கும் ரூ. 250 ஸன்மானமென்றும் நான்கு கேள்விகளுக்கும் த்ருப்திகரமாக விடையளித்துவிட்டால் ஆயிரம் ரூபா ஸன்மானமென்றும் பிரசுரித்திருப்பதாகச் சொன்னார். உண்மையில் அவர் நல்ல வித்வான். பரீக்ஷைக்கு நிற்கக்கூடிய அதிகாரியே. பரமரஸிகரும் பரமாப்தருமாதலால் திருமலையிலிருந்தவரையில் அவரோடு நெருங்கிப் பழகிவந்தேன். விநோதமாகப் பேசிவருகையில் ஒருநாள் சொன்னேன்—நியாய ஸித்தாஞ்ஜனத்தில் நான்கு கேள்விகள் நான் கேட்கிறேன், த்ருப்திகரமாகச் சொல்லிவிட்டால் நானொரு ஸஹஸ்ரம் ஸமர்ப்பிக்கிறேன், இப்படிச் செய்யலாமோ—என்று. அதற்கு அந்த ஸ்வாமி ஸாதித்தார்—எனக்கு ஸன்மானம் வேண்டா; மிகப் பெரிய க்ரந்தத்தில் ஏதோ ஸாஹஸமாக இறங்கியிருக்கிறேன். அறையில் ஆடி அம்பலத்திலாடுகிற கணக்கிலே நானே சில பெரியார்களிடம் சென்று பரீக்ஷிக்க ப்ரார்த்திக்கும்படி யெண்ணியிருக்கிறேன்; தேவரீர் பரீக்ஷித்தால் ஸமாதானம் உடனே ஸ்புரிக்காமற் போனாலும் ஸ்ரீகோசத்தைப் பார்த்துக் கொண்டாவது சொல்லலாமன்றோ ? இது அடியேனுக்கு மஹோபகாரமன்றோ ? இங்ஙனே அடியேன் பலரிடம் பரீக்ஷை கொடுத்துச் சென்றால் வெற்றி ஸித்தமாகுமன்றோ ? என்று.

அந்த ஸ்வாமி கையில் வைத்துக்கொண்டிருந்த ஸ்ரீகோசம் ரங்கராமாநுஜ ஸ்வாமியின் டீகையோடுகூடிய தேவநாகராக்ஷரப்பதிப்பு. ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபையார் 1934ம் வருஷத்தில் வெளியிட்டது. அதை அவர் கையிலே வைத்துக்கொண்டிருந்தபடியால் 'நான் கேட்கிற கேள்விகளுக்கு ஸ்ரீகோசத்தைப் பார்த்தே விடையிறுக்கலாம்' என்று சொல்லிக் கேட்கத் தொடங்கினேன்;—

(முதல் கேள்வி) ஜீவபரிச்சேதம் ஸேவித்திருப்பீரே; அதில் உபக்ரமத்தில் ஜீவலக்ஷணம் ஸாதிக்கிறீரே. நினைவுக்கு வருகிறதோ ? (விடை) ஆகா, நினைவுக்கு

வருகிறது; ''அல்பபரிமாணத்வே ஸதி ஜ்ஞாத்ருத்வம்'' என்று ஒரு லக்ஷணம். ''சேஷத்வே ஸதி ஜ்ஞாத்ருத்வம்'' என்று மற்றொரு லக்ஷணம். அதற்குமேல் *இத்யாதியுமுள்ளது. (வினா) இத்யாதி யிருக்கட்டும். ''சேஷத்வே ஸதி ஜ்ஞாத்ருத் வம்'' என்கிற லக்ஷணத்திற்குப் பிராட்டியிடத்தில் அதிவ்யாப்தி வாராதோ? (விடை) லக்ஷ்யமல்லாதவிடத்தில் லக்ஷணமிருந்தாலன்றோ அதிவ்யாப்தி என்று சொல்லி உடனே ஸ்ரீகோசத்தில் (பக்கம் 113ல்) வியாக்கியான பங்க்தியை வாசித்துக் காட்டுகிறார்—''லக்ஷ்ம்யா: ஜீவாந்தர்ப்பாவபக்ஷே து ந தோஷ:'' என்று. (வினா) வேங்கடாத்வரியின் லக்ஷ்மீ ஸஹஸ்ரத்தில் (ஐச்வர்ய ஸ்தபகே-14)*ஸ்ரீமத்ராமாவரஜ ஸரணிமித்யாதி ச்லோக வியாக்கியானத்தில் ஸ்ரீபராசரபட்டர் பிராட்டிக்கு ஜீவாந்தர்ப்பாவத்தை ஆதரித்திருப்பதாக எழுதி தூஷணம் செய்திருப்பதைப் பார்த்திருக்கிறீரோ? (விடை) ஒரு க்ரந்தத்தில் தேவரீர் எடுத்துக்காட்டி யிருப் பதைப் பார்த்துவிட்டு அதையும் எடுத்துப்பார்த்தேன்; பட்டரிடத்தில் தேசிகனுக்கு எம்பெருமானாரிடத்திலுங்காட்டில் அதிசயிதமான ப்ரதிபத்தியிருக்க, ஒரு வழிப் போக்கர் தூஷித்துவிட்டதனாலென்னாகும்? அதுகிடக்க. (வினா) ''லக்ஷ்ம்யா ஜீவாந் தர்ப்பாவபக்ஷே து ந தோஷ:'' என்றெழுதினாற்போலே ''லக்ஷ்மீர் நாம கிமபி ப்ருதக் தத்வம் நாஸ்தீதி வததாம் மதே து ந தோஷ:'' என்றும் எழுதலாமன்றோ? (விடை) அது எப்படி யெழுதலாம்? ஜீவாந்தர்ப்பாவபக்ஷம்போலே இது ஆசார்ய பரிக்ருஹீதமும் ப்ராமாணிகமுமல்லாமையாலே இதை ஒரு பக்ஷமாக எடுக்கத்தகா தன்றோ? இதற்குமேலும் அடியேனைக் கேட்டால் சொல்லவல்லேனல்லேன். வேறு கேள்வி கேட்க.

(இரண்டாங் கேள்வி) அதே பரிச்சேதத்தில் *இயம் கேவல லக்ஷ்மீ சோபாய த்வ ப்ரத்யயாத்மிகா, ஸ்வஹேதுத்வதியம் ருந்தே கிம் புநஸ் ஸஹகாரிணம்?* என்கிற காரிகையில் கேவல பதவ்யாவர்த்யம் இன்னதென்று விளக்கமுடியுமோ? (விடை) இதில் அடியேன் க்ரஹித்திருப்பதை விஜ்ஞாபிக்கிறேன். இந்த சுலோகத் தினால் ப்ரபத்தியின் உபாயத்வம் நிராகரிக்கப்பட்டதென்பது ஸ்பஷ்டமாக விளங்கு கின்றது. அதில் வினைப் போராட அடியேனுக்கு விருப்பமில்லை. பூர்வார்த்தத்தில் கேவலபதப்ரயோகம் பண்ணாமலிருந்திருக்கலாம்; அல்லது *லக்ஷ்மீ ததீசோபாயத்வ ப்ரத்யயாத்மிகா* என்றாவது ஸாதித்திருக்கலாம். இரண்டுமில்லை; *கேவல லக்ஷ்மீ சோபாயத்வ ப்ரத்யயாத்மிகா இயம் ப்ரபத்தி:* என்றருளிச் செய்திருக்கையாலே ப்ரபத்தியின் உபாயத்வம் தள்ளுண்டதுபோலவே பிராட்டியின் உபாயத்வமும் தள்ளுண்டது. லக்ஷ்மீசனுடைய உபாயத்வமாவது நிலைநின்றிருக்குமதோவென்று பார்த்தால் நியாஸதிலகத்தில் *த்வய்யேகஸ்மிந்நபி விஜஹதோ முக்தவத் ஸாதநத் வம்* என்று தேவரீர் அஸக்ருத் எடுத்துக்காட்டியுள்ள சுலோகத்தினால் அதுவும் தள்ளுண்டது. பின்னை எது உபாயம்? என்று பார்க்குமளவில், ஸ்ரீ வசனபூஷ ணத்தில் ''உன்மனத்தாலென்னினைந்திருந்தா யென்கிறபடியே ப்ராப்திக்கு உபாயம் அவன்னினைவு; அதுதான் எப்போதுமுண்டு; அது பலிப்பது இவன்னினைவு மாறி னால்'' என்றருளிச்செய்தபடியே அவன் நினைவுதான் உபாயம் என்று அறுதியிட வேண்டியதாகிறது. (வினா) ஸ்ரீ வசனபூஷண சூர்ணைகளை இவ்வளவு தாராளமாகச் சொல்லுகிறீரே, எப்படி தெரிந்துகொண்டீர்? (விடை) தேவரீருடைய க்ரந்தங்களைக்

கொண்டுதானே அடியேன் அதிகமாகப் போதுபோக்குவது? எம்பெருமானை ரைப்போலே நானும் ஏகலவ்யனென்று சொல்லிக்கொள்ளத் தடையில்லை. (வினா) இந்தகைய அர்த்தங்களை ஸ்ரீமதாண்டவன் திருமுன்பே சொல்லுவீரா? சொன்னீராகில் அங்கு ஸன்மானம் பெறுவீரா? (விடை) என்ன? தேவரீர்கூட இப்படி கேட்கிறதே? அபிமானம் பஹுமானம் என்று இரண்டுண்டே; ஸ்ரீமதாண்டவனுக்கு அபிமானம் ஒருவிதமா யிருந்தாலும் பஹுமானம் ஸ்ரீவசனபூஷணாதிகளில்தான். ஸதா அவற்றையே கடாக்ஷித்தாகிறது. இன்ன க்ரந்தத்தில் இன்னார் ஸாதித்தது என்று காட்டாமலே ஸாதித்தாகும். அது இருக்கட்டும். இப்போது அடியேன் விஜ்ஞாபித்தரீதியை அவலம்பிக்காமல் வேறு எவ்விதமாக ப்ரக்ருத விஷயத்தை நிர்வஹிக்க முடியும்? "நிதாநம் தத்ராபி ஸ்வயமகில நிர்மாணநிபுண:" என்கிற தேசிக திவ்யஸூக்தி யென்றின்முன்னே இந்த்ரஜால வாக்யார்த்தங்களெல்லாம் பாறிப் பறந்துபோய்விடுமே. இதர காலக்ஷேபபரர்களைப்போலே ஸீமந்தோந்நயநாதி ப்ரஸ்தாவ பரம்பரைகளினால் ஆந்யபர்யத்தை விளைந்துத் தலைக்கட்டுகிற வழக்கமில்லை. தமக்குத் தெரியாத விடங்களில் பெரியோர்களைக் கேட்கவேணும், பிறகு ஆலோசிப்போம்......என்றுகூட ஸாதிப்பதுண்டு. இதெல்லாமிருக்கட்டும். மேலும் சில கேள்விகள் கேட்கலாகாதா?

(மூன்றாவது கேள்வி) வ்யாப்தி விஷயத்தில் பரிஸமாப்யவர்த்தித்வத்தைப் பற்றிப் பரிசீலனை செய்திருப்பதுண்டோ? (விடை) ஸ்ரீமத் கோழியாலம் ஸ்வாமி ஸாதித்த பூர்ணத்வவிசார: என்கிற லகு க்ரந்தத்தையும் அதற்குமேல் தேவரீர் ஸாதித்த ப்ரஹ்ம வ்யாப்தி பரிஷ்க்ரியா என்கிற க்ரந்தத்தையும் பலகால் பரிசீலனை செய்திருக்கிறேன். தேவரீருடைய பரிஷ்க்ரியாவிலுள்ள ச்லோகங்களை யெல்லாம் கண்ட பாடமும் செய்திருக்கிறேன். (வினா) அது கிடக்கட்டும்; நியாய ஸித்தாஞ்ஜனத்தில் இதைப்பற்றின நிர்ணயமென்ன? ஸ்ரீகோசத்தைப் பார்த்துச்சொல்லுவதானாலும் ஸந்தோஷமே. (விடை) இதைப்பற்றிப் புதிதாகப் பார்க்கவேணுமா என்ன? இந்த ஸ்ரீகோசத்தில் (பக்கம் 193ல்) உள்ள ஸ்ரீஸூக்திகளை தேவரீர் விமர்சித்து எழுதியிருக்கிறது; அடியேன் (பக்கம் 320ல்) உள்ள பங்க்திகளையும் பரிசீலித்திருக்கிறேன். அந்த பங்க்திகளை இதோ வாசிக்கிறேன், கேட்டருள்க;—"...ப்ரமாணபலாத் துரபஹ்நவம் அப்யுபகதம் வா பவது; யத்வா, யந்நிரவயவம் தத் நையாயிகாத்யபிமதஜாதிவத் ஸர்வத்ர ஸம்யோகிநி ஸம்பூர்ணம் வர்த்ததாம்; ததேதத் ஸூத்ரகாரைரேவ ஆசங்க்ய பரிஹ்ருதம்; *க்ருத்ஸ்நப்ரஸ...கோபோவா* இத்யாதிநா. தத்ர ச தீப: "ஸகலேதரவிஸஜாதீயம் ச்ருத்யேக ஸமதிகம்யம் ஸர்வசக்தியுக்தம் ப்ரஹ்ம நிரவயவமபி கார்யஞ்ச பவத்யநந்தஞ்ச பவதிதி பரிமித சக்திவஸ்து ஸோத்யம் ந தத்ர ப்ரஸஜ்யதே; யதா ஜாதிவாதிநோ ஜாதிரேவ அமூர்த்தா கண்டமுண்டாதிஷு அத்யந்தவிலக்ஷணேஷு அநந்தேஷ்வபி பரிஸமாப்யைவ வர்த்ததே; ந தத்ர இதரவஸ்துசோத்யமிதி..." மேல் வாக்கியங்களையும் தேவரீரே கடாக்ஷிப்பது.

ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தில் "ச்ருதேஸ்து சப்த மூலத்வாத்" என்கிற ப்ரஹ்மஸூத்ரத்தைத் தொடாமலே ஸாதித்திருப்பது நியாயஸித்தாஞ்ஜன

ஸ்ரீஸூக்தி விருத்தமென்று தேவரீர் நிரூபித்திருப்பவைகளை நன்கு பரிசீலித்திருக்கிறேன். இதைப்பற்றித் திருவரங்கம் தாதுவையங்காரைக் கேட்டதற்கு அவர் நான்கு வகையான ஸமாதானங்கள் கூறினர்;—(1) *வ்ருத்தி ராதைச்* என்று ஒரு ஸூத்ரம்; *வ்ருத்திரேசி* என்று மற்றொரு ஸூத்ரம். ஆதைச் வ்ருத்தியா? ஏசி வ்ருத்தியா? என்று கேட்டால் இங்கு பரஸ்பர விரோதம் சொல்லமுடியுமோ? இது வியாகரணத்தில். ப்ரஹ்மஸூத்ரத்தில் புகுந்தாலோ *சமஸவதவிசேஷாத்* என்று ஒரு ஸூத்ரம், *ஹேதுவைசேஷ்யாத்* என்று ஒரு ஸூத்ரம். இங்கு அவிசேஷத்திற்கும் விசேஷத்திற்கும் பரஸ்பர விருத்தத்வமுண்டோ! (3) ஒரு மீமாம்ஸை *அதாதோ தர்ம ஜிஜ்ஞாஸா* என்று தொடங்குகிறது; மற்றொரு மீமாம்ஸை *அதாதோ ப்ரஹ்மஜிஜ்ஞாஸா* என்று தொடங்குகிறது. இங்குத்தான் விரோத ப்ரஸங்கமுண்டோ? (4) ஒரு உபநிஷத்தில் *அஸத் வா இதமக்ர ஆஸீத்* என்றோதிற்று; மற்றோருபநிஷத்தில் * ஸதேவ ஸோம்ய! இதமக்ர ஆஸீத் * என்றோதிற்று. இங்குத்தான் விரோதமுண்டோ?'' என்றிப்படி அடுக்கிக்கொண்டே போனர். தேவரீர் காட்டியுள்ள பரஸ்பர விரோதங்களை யெல்லாம் இந்த ப்ரதிபந்திகளாலே அவர் பரிஹரிக்கத்தட்டில்லை யென்கிறார். வாஸ்தவந்தானே. அவ்விடத்தில் அடியேனும் ஒன்று கூறினேன். (அதாவது) ப்ரஹ்மஸூத்ரத்திலேயே *ஆவ்ருத்தி ரஸக்ருதுபதேசாத்* என்று முன்னே சொல்லி *அநாவ்ருத்திச் சப்தாத்* என்று பின்னே சொன்னர். ஒரே ஹேதுவைக்கொண்டு ஆவ்ருத்தியையும் அநாவ்ருத்தியையும் ஸாதிக்கிறார் ஸூத்ரகாரர்; இது பரஸ்பர விருத்தமோ? விருத்தமென்று யாரும் ஆக்ஷேபிக்கவில்லையே என்றேன். மிகவுமுகந்தார். இன்னமும் ஒரு கேள்வி கேட்க.

(நான்காவது கேள்வி) ஸித்தாஞ்ஜந ஜீவபரிச்சேதத்தில் கைவல்ய விசாரத்தில்— ''ஏக க்ரந்த சகலாஸ்வாரஸ்யம் பஹூக்ரந்த ஸ்வாரஸ்யாய க்ராஹ்யம்'' என்று ஸாதித்திருக்குமிடத்தைப் பரிசீலித்திருக்கிறீரோ? (விடை) ஒருஸமயம் மதுராந்தகம் காலேஜுக்கு விடை கொண்டிருந்தபோது அங்குள்ள வித்வான்கள் தேவரீருடைய ஸத்ஸம்ப்ரதாயார்த்தஸார நிதியில் கைவல்ய விஷயமாக எழுதியிருந்தவற்றை விமர்சித்துக்கொண்டிருந்தார்கள். அவர்களுள் ஒருவர் சொன்னவார்த்தையாவது— அஸ்வரஸமென்பதும் அஸாதுவென்பதும் அஸமஞ்ஜஸமென்பதும் பர்யாயந்தானே. ''யதிப்ரவரபாரதீரஸபரேண நீதம் வய:'' என்றதற்கும் இதற்கும் என்ன சேர்த்தியுள்ளது. உபய ஸ்ரீஸூக்திகளும் பொருந்த நிர்வஹிக்கும் வழி தமக்குத் தெரியாமற்போனல் சதுச்லோகீபாஷ்யத்தில் * பஞ்சஸ்வேதேஷு பக்ஷேஷு கச்சிதேக: ப்ரமாணவாந்'' என்று மழுப்பினப்போலே மழுப்பிப்போகலாம்; அல்லது அதிகரண ஸாராவளியில் அபிநிவேச வசீக்ருத சேதஸ்கராய் ஒன்றோடுமிணங்காத ஒரு புதிய விஷயத்தை ப்ரஸ்தாவித்து *பாஷ்யாதிக்ரந்தலேசோபி அவஹிதமநஸாம் ஐதமர்த்யம் பஜேத* என்றாப்போலே இங்கும் ''கீதாபாஷ்யோக்திலேசோபி அவஹிதமநஸாம் ஐதமர்த்யம் பஜேத'' என்று தமக்கே அஸாதாரணமான ரீதியிலே ஒரு ச்லோகமிட்டுப்போயிருக்கலாம். முன்னுக்கும் பின்னுக்கும் உலைதக்கும்படியாகத் தாம் எழுதிவைப்பதுபோலவே பகவத்பாஷ்யகாரரும் எழுதி

வைப்பவரே யென்று உலகம் நினைக்கும்படி செய்ய இப்படியா எழுதிவைப்பது! என்று மூக்கில் விரலை வைத்துக்கொண்டு சொன்னார். அங்கிருந்த பண்டிதர்கள் வாயைத் திறக்கவில்லை. (வின) பரீக்ஷை வைத்திருப்பவர் ஸன்னிதியிலே இதையெல்லாம் ப்ரஸ்தாவித்துத் தெளியலாகாதோ? பரீக்ஷையென்றால் என்ன? பரித: ஈக்ஷா பரீக்ஷா என்றீரோ? (விடை) தத்வமுக்தாகலாபத்திலோ ஸர்வார்த்த ஸித்தியிலோ இரண்டிலுமோ பரீக்ஷை வைத்திருக்கலாம். இப்போது அநுஷ்டாநகாலமாயிற்று. விடை பெற்றுக்கொள்ளுகிறேன். மறுபடியும் நாளைக்கு விடைகொள்ளுகிறேன்.


(குறிப்பு):—அந்த ஸ்வாமி அடுத்தடுத்து மூன்றுநாள் வந்து ஸம்பாஷித்தார். அவ்விஷயங்கள் க்ரமேண வெளிவரும். திருமலையில் மஹாக்ரது முடிந்த பிறகு பத்துநாள் கழித்து ஸ்ரீமத் தேரழுந்தூராண்டவன் ஸ்வாமியின் பூர்வாச்ரம திருக்குமாரர் காஞ்சிக்கு வந்து அடியேனுடைய குடிலுக்கு எழுந்தருளினர். ச்வேதத்வீபவாஸிபோல் ஸேவை ஸாதித்த அவரைக்கண்டு தேவரீர் எவ்விடம்? என்று வினவினேன். திருமலையில் நியாய ஸித்தாஞ்ஜன சர்ச்சை நடந்தபோது ஸேவித்துக்கொண்டேனே, தேரழுந்தூரென்றும் விஜ்ஞாபித்தேனே, மறந்தபடியோ? என்றார். பிறகு நெடும்போது வார்த்தை யாடிக்கொண்டிருந்து "சென்னையில் ஆண்டவனாச்ரமத்தில் இரண்டொருமாதமிருப்பேன்" என்றுரைத்துச்சென்றார்.

## விசேஷ விஜ்ஞாபனம்

திருமலையில் ஸ்ரீ லக்ஷ்மீநாராயண மஹாக்ரதுவின் நிகழ்ச்சியைப்பற்றிச் சென்றவிதழில் (ஸ்ரீராமாநுஜன் 285ல்) விரிவாகவே விஜ்ஞாபித்திருக்கிறேன். ஆனாலும் பர்யாப்தி பிறக்கவில்லை. நம்முடைய வாழ்நாளில் இதுவொரு பரம பாக்ய பரிபாகமான ஸந்தர்ப்பமென்னவேணும். இத்தகைய ஸந்தர்ப்பம் இதுவரை நேர்ந்ததுமில்லை, நேரப்போகிறதுமில்லை. எனக்கு நாற்றிசைகளிலும் நேயர்களுள்ளார்கள். முப்பது நாற்பது வருடங்களுக்குமுன்பு காணப்பெற்றவர்கள், கடிதமூலமான பரிசயம்மட்டுமே யுள்ளவர்கள், அதுவுமின்றிக் கேள்வி மட்டுமுள்ளவர்கள்—ஆகிய இவர்களையெல்லாம் கண்டு பேசிக்களிக்கப்பெற்றது சிந்தைக்கும் கோசரமல்லாதது. அவர்கள் பெரும்பாலும் நம்முடைய நான்கு பாஷை வெளியீடுகளை அநுபவித்து வருபவர்களாதலால் அவர்களது உகப்பும் நம்முடைய உகப்பும் நெஞ்சால் நினைப்பரிதென்னத்தகுமத்தனை. விசேஷித்து உபயகலை வித்வான்களையும் ஸ்மார்த்தமாத்வ வித்வான்களையும் சந்தித்து வார்த்தையாடப்பெற்ற பாக்கியமோ ஏழேழ்பிறவி தவம் புரிந்தாலும் கிடைக்கக்கூடியதன்று. அந்த விசேஷங்களையெல்லாம் வெளியிட்டால் அதுவொரு பாரதமாகும். ஸமயத்தில் வெளிவரும். ஆவலுடன் எதிர்பார்த்திருங்கள். ... ...


திருவல்லிக்கேணி மஹீஸார அபிஜன ஸபை


# ரஜதோத்ஸவத்தில் ஸ்வாமி காலக்ஷேபம்




'மஹீஸாரம்' என்று ப்ரஸித்தி பெற்ற திருமழிசை க்ஷேத்ரத்தில், ஸ்ரீமத் மணவாளமாமுனி காலம் முதலாக, அவருடைய நியமனத்தின் பேரில், தங்களுக்குள் ஸப்த கோத்ர வ்யவஸ்தையை ஏற்படுத்திக்கொண்டு, திருமழிசைப் பிரானின் கைங்கர்யத்தோடு பகவத் பாகவதார்ச்சனங்களையும் பண்ணிக்கொண்டு, உபயவேத வேதாந்த வித்வான்களாகவும் சாஸ்த்ர ப்ரவீணர்களாகவும், எழுந்தருளியிருந்த திருமழிசையார் ஸமூகத்தில், "மஹீஸார அபிஜன ஸபை" என்கிற ஸபை வெகுகாலமாக நடந்து வருகிறது. ஸ்ரீமான் கோவில் கந்தாடை ராயஜி ஸ்ரீநிவாஸாச்சார் ஸ்வாமியும், ஸ்ரீமதுபயவே திருமழிசை தாத்தப்பங்கார் ஸ்வாமியும், இந்த ஸபையை ஏற்படுத்தி வேத வேதாந்த விசாரங்களும், பகவத் விஷய காலக்ஷேபங்களும் நடத்தி வந்தார்கள். இந்த ஸபையின் சமூகத் தொண்டினைத் தொடர்ந்து திருமழிசையார் ஸத்ஸபை நடத்திவந்து, ஷ ஸமூகத்தார் இவ்வருஷம் ஸபையின் ரஜதோத்ஸவ வைபவத்தைத் திருவல்லிக்கேணியிலும், திருமழிசையிலும் வெகு விமரிசையாகக் கொண்டாடினார்கள்.

சென்ற ஜூன் மாதம், 13ந் தேதி முதல் எட்டு நாட்கள்வரை, திருவல்லிக்கேணி ஸ்ரீவானமாமலை மடத்தில், ஸ்ரீமான் கோவில் சதாபிஷேகம் ஸ்வாமி, பகவத் விஷய ஸாரமும், பின்னர் பதிமூன்று நாட்கள், ஆழ்வார், ஆசார்யர்கள் வைபவங்களை ஸ்ரீமான் பிள்ளைலோகம் பாஷ்யகாரர் ஸ்வாமியும், காலக்ஷேபம் ஸாதித்தார்கள். திருமழிசையில் விசேஷமான திருவாராதனங்களும், ததீயாராதனைகளும் ஜூலை 9ந் தேதி நடைபெற்றது.





இந்த வைபவங்களின் சிகரம் போலே, சென்ற ஜூலை மாதம் 16-ந் தேதி (ஆடி முதல்தேதி)யன்று இந்த ஸபா வைபவங்களின் பூர்த்தியை அநுஸரித்து நம் ஸ்வாமி, ஸ்ரீமான் பத்மவிபூஷண, மஹாமஹிமோபாத்யாய, காஞ்சீபுரம் மகாவித்வான் பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர் ஸ்வாமிகளின் காலக்ஷேபம் ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த ஸபையின் வெள்ளிவிழா மலரை அந்த ஸந்தர்ப்பத்தில் ஸ்வாமி ப்ரகாசப்படுத்தினது குறிப்பிடத்தக்கது. (திருமழிசைப் பிரானைப் பற்றிய பல வ்யாஸங்களோடு, ஸ்வாமியின் வ்யாஸமும், திருமழிசைப்பிரானின் வைபவம், கட்டியம் பிரபந்தங்களோடு மிக அழகான முறையில் பல படங்களுடன் அச்சிடப்பட்டுள்ள இந்த மலர் இரண்டு ரூபாய்க்குத் தரப்படுகிறது. வேண்டுகிறவர்கள் ''காரியதரிசி, மஹீஸார அபிஜன ஸபை, நெ. 6, தேரடித் தெரு திருவல்லிக்கேணி'' என்கிற விலாஸத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.)



P.B.A. ஸ்வாமி, ''திருமழிசைப் பிரானின் திவ்யஸூக்திரஸங்கள்'' என்கிற விஷயத்தைக் காலக்ஷேபம் ஸாதித்தருளும் காட்சியையும், திரளாக வந்த வித்வத் கோஷ்டியையும், ஸபையின் காரியதரிசி ஸ்ரீ 'பூரம்' ஸத்யமூர்த்தி அய்யங்கார் வந்தனோபசாரம் தெரிவித்துக் கொள்வதையும் முதல் இரண்டு படங்களில் பார்க்கலாம். மூன்றாவது படம் ஸ்வாமிக்கு, ஸ்ரீ பார்த்தஸாரதி ஸந்நிதி மரியாதைகளோடு ஸம்பாவனை ஸமர்ப்பித்தல். நான்காவது, திருமழிசையார் ஸபையினரோடு ஸ்வாமி ஸேவை ஸாதிப்பது.

பூரம் ஸத்யமூர்த்தி ஐயங்கார்,

(திருமழிசை).

—★—

## ஷஷ்டியப்தபூர்த்தி மஹோத்ஸவ ப்ரகடனம்.

ஸ்ரீமத் வேதமார்க்க ப்ரதிஷ்டாபநாசார்யராய் உபய வேதாந்த ப்ரவசந துரந்தரராய் நியாய வேதாந்த வித்வந்மணியா யெழுந்தருளியிருக்கும் திருநாங்கூர் பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமிக்கு நிகழும் பரீதாவி வருஷம் ஆவணிமீ 10௨ பூரட்டாதி நக்ஷத்ரம் சனிக்கிழமை கூடின சுபதினத்தில் ஷஷ்டியப்தபூர்த்தி மஹோத்ஸவம் ப்ராப்தமாகிறது. இது அவருடைய ஜன்மபூமியான திருநாங்கூரில் வைகுந்த விண்ணகரம் ஸன்னிதிக்கருகிலுள்ள அவரது திருமாளிகையில் (26—8—72) நடைபெறுகின்றது. முன்னடி 22—8—72 செவ்வாய்க்கிழமை தொடங்கி அருளிச்செயல் ஸேவையும் வேதவேதாங்க பாராயணங்களும் வித்வான்களின் உபந்யாஸங்களும் விசேஷ வைபவமாக நடைபெறும். திருமாளிகைசிஷ்யர்களும் மற்றுமுள்ள அன்பர்களும் கூடியிருந்து குதுகலித்து அநுபவிக்கவேணும்.

## ஸ்ரீ பாஞ்சராத்ர ப்ரதிஷ்டா விதி.

பகவத் சாஸ்த்ரமான ஸ்ரீ பாஞ்சராத்ர ஆகமங்களில், மூலஸம்ஹிதைகளான ஸாத்வத, பௌஷ்கர. ஜயாக்ய ஸம்ஹிதைகள், ரத்ன த்ரயங்கள். இவைகளில் ஸாத்வதத்தின் நுண்பொருள்களை ஈசுவர ஸம்ஹிதையும், பௌஷ்கரத்தின் பொருள்களை பாரமேச்வர ஸம்ஹிதையும், ஜயாக்யத்தின் பொருள்களை பாத்ம ஸம்ஹிதையும் ஸவிஸ்தாரமாகக் கூறுகிறது. முறையே, ஸாத்வத ஈச்வர ஸம்ஹிதைகள் திருநாராயணபுரத்திலும், பௌஷ்கர பாரமேச்வர ஸம்ஹிதைகள், திருவரங்கம் பெரிய கோயிலிலும், ஜயாக்யபாத்ம ஸம்ஹிதைகள் பெருமாள்கோவிலான அத்திகிரி அருளாளன் ஸந்நிதி காஞ்சிபுரத்திலும் அனுஷ்டிக்கப்படுகிறது. "ரத்நேஷு த்ரிஷு வபி ச்ரேஷ்டம் ஜயாக்க்யம் தந்த்ரமுச்யதே" என்றபடி, இம் மும்மணிகளிலும், ஜயாக்யமும் அதன் வியாக்யான ஸம்ஹிதையான பாத்மமும் தலைசிறந்தது. ஏனெனில் பகவத்ப்ரோக்தத்திலும் சரி. இன்றைய உலகில் ஆஸேது ஹிமாசலாந்தம், கர்ஷணாதி ப்ரதிஷ்டாந்தம், ஸ்ரீபாத்மஸம்ஹிதா விதிப்படிதான் நடைபெற்று வருவது ப்ரத்யக்ஷ அனுபவஸித்தம். அடியேன் ஸ்ரீபாத்ம ஸம்ஹிதையை இன்றைய உலகியலுக்கேற்பத் தமிழ்ப்படுத்தி எழுதி உள்ளேன். இது ஏனைய, பெரிய சிறிய அர்ச்சக ஸஹோதரர்களுக்கும், மற்றும் ஆஸ்திக சிகாமணிகளுக்கும், தேவஸ்தானம் லைப்ரெரிகளுக்கும் மஹோபகாரமானபடியால் எல்லோரும், "ஸ்ரீ பாஞ்சராத்ர ப்ரதிஷ்டா விதி" என்பதான இத்தமிழ் நூலை வாங்கி ஆதரிக்கவேணுமாய் பிரார்த்திக்கிறேன். இதன் விலை தபால் உள்பட ரூ. 5—00.

கிடைக்குமிடம் :—

**அ. வை. பெரிய திருவடி பட்டர்,**
தெற்கு மாடவீதி, ஸ்ரீவைகுண்டம்,
திருநெல்வேலி ஜில்லா. (தமிழ் நாடு)